Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 135 | சனிக்கிழமை | பங்குனி 28 ஆம் நாள் 10 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## தனிமையில் வசித்தவர் உயிரிழப்பு

கொடிகாமம், ஏப்.10
தனிமையில் வசித்த ஒருவர் சடமாக மீட்கப்பட்டுள்ளார். கொடிகாமம், வேவி 19 >

## திருநெல்வேலி கடைகள் ஞாயிறு முதல் திறக்கும்

யாழ்ப்பாணம், ஏப்.10
திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளில் உள்ள கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்ட கடைகள் தவிர்ந்த, ஏனைய கடைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை திறக்க அனுமதிக்கப்படும்.
இவ்வாறு வடக்கு மாகாண 19 >

## யாழ்ப்பாணத்தில் 24 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஏப்.10
யாழ்ப்பாணத்தில் நேற்று 24 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத் 19 >

### முச்சந்தி முரளி



"சமஸ்டியும் இல்லை பொலிஸ் அதிகாரமும் இல்லை என்டால் தமிழருக்கு என்னதான் தருவியள் மாத்தையா?"

# கனவிலும் கிடைக்காது "சமஷ்டி"

சரத் வீரசேகர திட்டவட்டம்



கொழும்பு, ஏப்ரல் 10
புதிய அரசமைப்பிலும் ஒற்றையாட்சியே பேணப்படும். ஒற்றையாட்சியால் நாடு எந்தப் பேரழிவையும் சந்திக்கவில்லை. சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். 19 >

## கடலில் வந்த பானத்தை அருந்தியவ ர்உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.10
கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த பானத்தை அருந்திய ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நாகர்கோயில் கிழக்கில் நடந்துள்ளது.
க.சிறிகுமார் (வயது47) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் நேற்றுக் கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றில் இருந்த பானத்தை அருந்தினார் என்று கூறப்படுகின்றது. அதன்பின்னர் அவருக்கு 19 >

## திங்கள்சிறப்பு விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப்.10
நாளைமறுதினம் 12ஆம் திகதி திங்கட்கிழமை சிறப்பு அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகள் தமிழ், சிங்களப் புத்தாண்டு விடுமுறை தினங்களாகவுள்ள நிலையில், 12ஆம் திகதியும் சிறப்பு விடுமுறை தினமாகப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (எஇ)

## புலிகளை மீளுருவாக்கவே மேயர் மணி முயற்சியாம்!

அமைச்சர் சரத் வீரசேகர கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப். 10
யாழ்ப்பாணம் மாநகர சபையின் அனுமதியின்றி, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தன்னிச்சையாகவே மேயர் மணிவண்ணன் 'காவல் படை' உருவாக்கியுள்ளார். அவர்களின் சீருடை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையின் சீருடையை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப் 19 >

## மணிவண்ணனுக்கு பிணை



யாழ்ப்பாணம், ஏப்.10
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனுக்கு நேற்று இரவு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று பிணை வழங்கியது.
யாழ்ப்பாணம் மாநகரத்தின் தூய்மையைப் பேணுவதற்காக மாநகர சபையால் 5 பேர் கொண்ட காவல் படை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. கடந்த புதன்கிழமை இந்தப் பிரிவினர் பரீட் சார்த்தமாகத் தங்கள் கடமைகளை மேற் 19 >

## பொலிஸ் அதிகாரம் மேயருக்கு இல்லை!

அரசு திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 10
பொலிஸாரின் பணிகளை முன்னெடுப்பதற்கான அதிகாரம் ஒரு போதும் மாநகர முதல்வருக்கு வழங்கப்படமாட்டாது என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மேயர் கைது செய்யப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கை 19 >

## சீனாவின் தடுப்பூசியை பயன்படுத்த தடைவிதிக்கக் கோரி மனுத்தாக்கல்

மூத்த சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தாக்கல்

கொழும்பு, ஏப். 10
சீனாவின் சைனோஃபோர்ம் கொவிட் தடுப்பூசியை இலங்கையருக்கு பயன்படுத்துவதைத் தடை விதிக்கக் கோரும் அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றத்தில் நேற்றுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நோயாளர்களின் உரிமைக 19 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அரசியல் லாபம் தேடுகிறது அரசு

## யாழ். மாநகர முதல்வரின் கைதுக்கு முன்னாள் எம்.பி. சரவணபவன் கண்டனம்



**யாழ்ப்பாணம், ஏப்.10**
**பெரும்பான்மையின மக்கள் மத்தியில் சரிந்து செல்லும் தனது செல்வாக்கை மீட்பதற்கான கோத்தாபய அரசின் திட்டமே யாழ்ப்பாணம் மாநகர மேயரின் கைது. புலிப் பூச்சாண்டி காட்டி தங்கள் வாக்கு வங்கியைக் கட்டியெழுப்பும் ராஜபக்சக்களின் வழமையான உத்தியே இது. தங்கள் அரசியல் நலனுக்காக தமிழ் மக்களை இவ்வாறு அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டை அரசு நிறுத்த வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன்.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டார். இது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே ஈ.சரவணபவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தமிழர் தரப்பில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் எவரும் இதுவரை பிரயோகிக்காத ஓர் அதிகாரத்தை அதை விரிவாக பொருள்கோடல் செய்து வி.மணிவண்ணன் முதற்தடவையாகப் பிரயோகித்துள்ளார். அது சிங்கள தேசத்தை கிலிகொள்ளச் செய்துவிட்டது. அவர்களுக்கு சீருடையோ, அதன் நிறமோ பிரச்சினையல்ல. அதிகாரப் பிரயோகிப்பை ஆட்சியாளர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

அரசுக்குத் தெற்கில் தேய்ந்து செல்லும் தங்கள் வாக்கு வங்கியை தூக்கி நிறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்தினால் அவர்கள் படுதோல்வியைச் சந்திக்க நேரும். அதனால் தங்கள் வழமையான உத்தியை இப்போதும் ஆரம்பித்துவிட்டனர்.

போரில் வென்றோம் என்று கூறி 2010ஆம் ஆண்டு பெரும்பான்மையின வாக்குகளைப் பெற்றனர். ஈஸ்டர் தாக்குதலை முன்னிறுத்தி 2019ஆம் ஆண்டு தேர்தலில் வென்றார்கள். இப்போது தங்கள் வாக்கு வங்கியை அதிகரிக்க மீண்டும் புலிப் பூச்சாண்டியைக் கையில் எடுத்திருக்கிறார்கள்.

மாற்றுக் கருத்தாளர்கள், தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள், ஊடகங்கள் என அனைவரையும் அடக்கி ஒடுக்கவே இப்போதைய அரசு விரும்புகின்றது. ஊடகங்கள் மீதான வழக்குகள், நகர மேயர் கைது என்று இந்த அரசின் அடக்குமுறைப் போக்கு நீள்கின்றது. தமிழ் மக்கள் நிம்மதியாக மூச்சு விடக்கூடாது என்பதுதான் அவர்களின் சிந்தனையாகவுள்ளது.

தங்களின் இந்த நோக்கத்துக்காக, உலக நாடுகளால் மிக மோசமான சட்டம் என்று சொல்லப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு கையில் எடுத்திருக்கின்றது. இந்தச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று பல நாடுகள் வலியுறுத்தும் நிலையில், தற்போதைய அரசு தொடர்ந்தும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை ஒடுக்க முயல்கின்றது. அரசின் இந்தப் போக்கை நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகள் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இப்படியான மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், உயிர்க் கொலைகளைக் கண்டு அடங்கியிருந்து இருந்தால் இப்போது இந்தத் தீவில் தமிழர்கள் என்ற இனமே இருந்திருக்காது. அராஜக அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் அனைவரும் தமிழர்களாக ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்.- என்றுள்ளது.

# மணிவண்ணனின் கைது இனவாதம்!

- *அவரை அரசு உடனடியாக விடுதலை செய்யவேண்டும்*
- *ஐ.நா. மற்றும் தூதரகங்களும் தலையிடவேண்டும்*
- *விக்னேஸ்வரன் எம்.பி. கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை மோசமான இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையிலானது. மணிவண்ணனை விடுதலை செய்வதற்கு அரசும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியுள்ளார், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.

மணிவண்ணன் கைது தொடர்பில் அவர் அனுப்பிய கேள்வி பதில் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மாநகர காவல் படை என்ற பெயரில் மணிவண்ணன் அமைத்த சுகாதார கண்காணிப்பு குழுவின் சீருடை விடுதலைப்புலிகளின் காவல்துறையின் ஆடையை ஒத்திருப்பதாகக் கூறியே மணிவண்ணனை அதிகாலை வேளையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு கைது செய்திருக்கின்றது.

**தமிழ் மக்களின் ஆவிகளோ!**

யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் அணிந்த ஆடை விடுதலைப்புலிகளின் காவல்துறையின் இள நீல நிற ஆடையை ஒத்ததாகக் காணப்படுகின்றது என்று கூறுவது நகைப்புக்கு இடமானது. அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் ஆவிகள் அரச தலைவர்களை நிதானம் இழக்க வைத்து விட்டனவோ நான் அறியேன்.

ஒரு சிறிய மாநகரத்தை நிர்வகிப்பதற்கும் தமது பிரதேசங்களை தூய்மையாகவும், சுத்தமாகவும் வைத்திருப்பதற்கும்கூட தமிழ் மக்கள், தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதை சகித்துக்கொள்ள முடியாமல் இருக்கும் இந்த அரசின் மனநிலையையும், செயற்பாடுகளையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். புலிகளின் சீருடைச் சீலையைப் போன்ற எந்தவொரு சீலையையும் எவரும் பாவித்தலாகாது என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளதோ நான் அறியேன்.

**புலிகள் மீது அரசுக்கு பயமோ!**

12 வருடங்களுக்கு முன்னர் இறந்துபோன புலிகள் மீது அரசுக்கு அவ்வளவு பயமா என்று கேட்க வேண்டும் போல் தோன்றுகின்றது.

இந்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் எந்தளவு மோசமான ஒரு நிலைமைக்குச் சென்றுகொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.

**சர்வதேசத்தின் பொறுப்பு**

ஆகவே, இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டு வருகின்ற நிலையில், தமிழ் மக்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு இருக்கின்றது.

மணிவண்ணன் கைது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை உட்பட இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் உடனடியாகத் தலையீடு செய்யவேண்டும். - என்றுள்ளது.

(து)

# அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக மொஹான்

அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹான் சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகமாக செயற்பட்டுவந்த நாலக கலுவெவ, தனிப்பட்ட விடயம் காரணமாக என்றுகூறி, கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்திருந்தார். (தஇ)

# மணி கைதுக்கு அமெ. கவலை

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தனது ருவிற்றர் பதிவில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எல்லோருடைய அடிப்படைச் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் அதேவேளை, பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்கு நீதித்துறை பாதுகாப்புகளுடன் கூடிய வலுவான சட்ட விதிமுறைகளைக் கொண்டிருப்பது சிறந்த வழி. - என்றும் அவர் ருவிற்றரில் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

# திடீரென முடங்கின ரயில் சேவைகள்

கொழும்பு, ஏப். 10

ரயில் பணியாளர்கள் நேற்று திடீர் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர் என்று ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட திட்டமிடப்பட்ட அனைத்து ரயில்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன, ரயில் திணைக்களத்தில், பொது முகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# விந்தனின் வாகனத்தை மோதியது ராணுவ ஜீப்



கிளிநொச்சி, ஏப். 10

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பயணம் செய்த வாகனத்தை இராணுவ வாகனம் நேற்று மோதியது. அதனால் வாகனம் சேதத்துக்கு உள்ளானது.

விந்தன் கனகரத்தினம், தனிப்பட்ட தேவை கருதி தனது குடும்பத்தினருடன், துணுக்காய் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது வெள்ளாங்குளம் காட்டு பகுதியில், அவரின் ஹைஏஸ் வாகனத்தை, பின்னால் வந்துகொண்டிருந்த இராணுவ ஜீப் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் 2022 இல் கட்டுப்படுத்தப்படுமாம்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.10**

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு இவ்வருடத்துக்குள் முற்றுப் புள்ளி வைக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

இலங்கை கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றன. இப்பிரச்சினை தொடர்பாகத் தான் ராஜதந்திர மட்டத்திலான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளேன். சாதகமான முடிவுகளை அடையக்கூடிய விதத்தில் பேச்சு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. அப்பேச்சுஆரோக்கியமான பெறுபேறுகளைத் தரும். குறிப்பாக இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் காரணமாக வடமாகாணத்துக்கே அதிகளவு பாதிப்பு ஏற்படுகிறது. தொடர்ந்தும் இவ்வாறான அத்து மீறல்களுக்கு இடமளித்தால் இலங்கையின் கடல் வளம் அழிவடையும். தற்போது தமிழகம் உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தேர்தல் நடைபெறுவதால் தேர்தல் பரபரப்பு அடங்கியதும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் ஆலோசனை மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தனவின் ஒத்துழைப்புடன் குறித்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும். கடற்படைக்கு சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார். (ப)

# சிறு இனவாத கட்சியினரே நாட்டுக்கு ஆபத்தானவர்கள்

## முகைதீன் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.10

எந்தவொரு சிறுபான்மைக் கட்சிகளாலும் இந்த அரசுக்கோ அல்லது நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கோ ஆபத்துக் கிடையாது. மாறாக பெரும்பான்மையினரின் சிறு இனவாதக் கட்சியினரே இந்த அரசுக்கும், நாட்டுக்கும் ஆபத்தானவர்கள்.

இவ்வாறு தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் முகைதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தகுதி அற்ற அமைச்சர்களைத் தன்வசம் வைத்திருக்கும் அரசு தள்ளாடும் நிலையில் உள்ளது. இதனை உணரமுடியாத நிலையில் ஜனாதிபதியும், பிரதமரும் இருப்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

இந்த நிலை தொடருமானால் நாட்டின் பொருளாதார, நல்லிணக்க மற்றும் இனங்களுக்கு இடையில் உள்ள புரிந்துணர்வு போன்றவற்றில் வித்தியாசம் ஏற்படும். நாட்டின் எதிர்காலம் தலைகீழாகும் அபாயம் ஏற்படலாம்.

சிறுபான்மை இனத்தை நசுக்க குறிவைத்துள்ள அரசு, நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமாகக் கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச நாடுகளுடன் வர்த்தக மற்றும் கல்விசார் துறைகளில் நெருக்கத்தை ஏற்படுத்த சர்வதேச உறவுகளை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை சீனாவின் அனுசரணையில் வாழ முடியாது. மாறாக அனைத்து நாடுகளுடனும் இராஜதந்திர உறவைப் பேண வேண்டும். என்றார். (ம.4)

# பேராயர் கர்தினால் அரசுக்கு ஆதரவா?

## அருட்தந்தை சக்திவேல் சாடல்

கொழும்பு, ஏப்.10

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்கள் அரசுக்கு ஆதரவானவையாகவே இருக்கின்றன. இந்த நிலையில் தற்போது அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்தை அவர் ஏற்றுக் கொண்டால், முஸ்லிம்கள் மீது அவர் குற்றஞ்சாட்டுவது போன்ற நிலையே உருவாகும். எனவே அவர் மிகுந்த அவதானத்துடனும், நடுநிலைமையுடனும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரிகள் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் வெளியிடப்பட்ட கருத்தானது. முஸ்லிம்களைக் குற்றவாளிகளாகக் காண்பிப்பதற்கான முயற்சியாகும். எனினும் நாடாளுமன்றில் இடம்பெறும் உரைகள் மற்றும் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்படும் விமர்சனங்களிலிருந்து, குற்றஞ்சாட்டப்பட்ட வர்களுக்கும் மேலாக ஒரு சக்தி இயங்குகின்றது என்பது வெளிப்படுகின்றது. அவர்கள் யார் என்பது குறித்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்படவில்லை.

ரஞ்சித் ஆண்டகையின் செயற்பாடுகள் தமிழ் மக்களைப் புண்படுத்துபவையாக அமைந்துள்ளன. 1995 ஆம் ஆண்டு நவாலியில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற போது, அது தமிழர்களின் மண்ணில் இடம்பெற்ற சம்பவம் என்பதால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், ஆயர்கள் பேரவையும் அமைதி காத்தனர். அதேபோன்று இறுதிப் போரின் போது கொல்லப்பட்ட அருட்தந்தையர்கள் தொடர்பிலும், முகாம்களில் அடைக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட கத்தோலிக்கர்கள் தொடர்பிலும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வாய் திறக்கவில்லை. நீதிக்கான குரல் என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கும்
ஒடுக்கப்பட்டவர்களுக்குமானதாக இருக்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டில் ஆயர் இராயப்பு ஜோசப் ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் எங்கே என்ற கேள்வியை முன்வைத்து சர்வதேசத்தின் கதவுகளைத் தட்டினார். அதனால் அவரை பிரிவினைவாதி என்றும் பயங்கரவாதி என்றும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்றும் குறிப்பிட்டனர். இந்த விடயத்தில் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், ஆயர்கள் பேரவையும் அமைதிகாத்ததுடன், இராயப்பு ஜோசப்பைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இப்போதும் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான குரலாக மல்கம் ரஞ்சித் ஆண்டகை இல்லாதிருப்பது அவரின் ஒரு பக்கச்சார்பான போக்கையே வெளிப்படுத்தியுள்ளது- என்றார். (ம,4)



# கொழும்புத் துறைமுக நகரம் இலங்கையில் இன்னொரு நாடு

## விவாதத்தைக் கோரினார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஏப்.10

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டவரைவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான லக் ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்ற விவாதத்தைக் கோரியுள்ளதோடு, கொழும்புத் துறைமுக நகரம், இன்னொரு நாடாகக் காணப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்தன கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டவரைவை சபையில் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்திருந்தார். இச்சட்டவரைவுக்கு எதிர்ப்பைத் தெரிவித்த லக் ஷ்மன் கிரியெல்ல, “ஒரு நாட்டில் துறைமுக நகரமென்பது இன்னொரு நாடாக இருக்கிறது. ஒரே நாடு, ஒரே சட்டமென்றாலும், ஒரே நாட்டில் இரு சட்டங்கள் உள்ளன. எனவே, இது தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் வேண்டும்.” என்றார். (ப)

# போதையில் வாகனம் செலுத்தினார் மதகுரு

## வைரலானது காணொலி

கொழும்பு,ஏப்.10

பௌத்த மதகுரு ஒருவர் மதுபோதையில் வாகனம் செலுத்துவது தொடர்பிலான காணொலி ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. கொழும்பு புறநகர்ப் பகுதியில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற மதகுருவை, பிரதேச மக்கள் சுற்றிவளைத்து, வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். மதகுருவின் பெயரோ அவர் தொடர்புடைய அல்லது விகாரையின் பெயரோ வெளியிடப்படவில்லை. இது தொடர்பில் பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ப-4)

# ஆளும் கட்சி கூட்டணிக்குள் குழப்பம்; தலைவர்கள் விரைவில் சந்தித்து பேசுவர்

## வாசுதேவ தகவல்

கொழும்பு, ஏப். 10

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், அந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஏனைய கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல்களைச் சரி செய்யும் நோக்கில், கட்சித் தலைவர்களின் சந்திப்பு விரைவில் நடைபெறவுள்ளது.

இவ்வாறு அந்தக் கூட்டணியிலுள்ள கட்சித் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவாகவே ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றை எதிர்கொண்டோம். இதன் காரணமாகவே மக்கள் எமக்கு ஆணை வழங்கினர்.

இந்த நிலையில் கூட்டணிக்குள் முரண்பட்ட நிலையில் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது அரசை பலவீனமாக்கும்.

மாகாணசபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனி வழியில் செல்லும் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அவர்கள் தனி வழி சென்றால் பெரமுனவுக்கு பாதிப்பில்லை என்று அந்தக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களும் போட்டிபோட்டுக் கொண்டு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். எனவே மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு முன்னர் கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு முடிவு கட்டப்படவேண்டும், என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியை சிறைவைக்க அரசால் ஒருபோதும் முடியாது

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



**கொழும்பு,ஏப்.10**
**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எப்படிக் கைது செய்வது, அவரை எப்படி சிறையிலடைப்பதென்பது அரசுக்குப் பெரும் சிக்கலாகும். இவ்வாறான நிலையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரத்தை எவ்வாறு மறைப்பதென்று அரசு சிந்தித்து வருகின்றது.**

இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.
ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான ஐந்தாவது நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை மறைப்பதற்கே நௌபர் மௌலவி முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவளித்தனர் எனத் தெரிவித்து, ஏப்ரல் 21 தாக்குதலை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க நீதித்துறை, இலங்கையர்கள் 3 பேருக்கு எதிராக கடந்த ஜனவரி மாதம் வழக்குத் தொடுத்திருந்தது.
அவர்கள் தான் முஹமட் நௌபர், முஹமட் அன்வர் ரிஸ்கான், அஹமட் மில்ஹான், ஹயாத்து முஹம்மத்.
நௌபர் என்பவர் இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இரண்டாவது நபராக இருந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆனால், முஹமட் நௌபர் என்பவர் இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று அமெரிக்காவின் எப்.பி.ஐ. அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் நௌபர் மௌலவி என்பவரை ஏப்ரல் 21 தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக அரசு அறிவித்துள்ளது.
அரசு திடீரென நௌபர் மௌலவி என்பவரை பிரதான சூத்திரதாரியாக பெயரிடுவது, இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை மறைப்பதற்கான சதியா என்ற சந்தேகம் எழுகின்றது. ஆணைக்குழுவுக்குச் சாட்சியமளித்த சஹ்ரானின் மனைவி, சாய்ந்தமருதில் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் சாராவின் குரலை கேட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.
அப்படியாயின் ஏன் சாராவைத் தேடுவதற்கு அரசு முயற்சிக்க வில்லை.
ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த அதிகமானவர்களின் சாட்சியங்களைப் பார்க்கும் போது இந்தத் தாக்குதலுக்கும், அரசுக்கும் ஏதாவது ஒருவகையில் சம்பந்தம் இருக்க வேண்டும்- என்றார். (ப-4)



# நௌபர் பிரதான சூத்திரதாரியெனில் விசாரணைக்கு அழைக்காதது ஏன்?

## ஐ.தே.க. கேள்வி

கொழும்பு,ஏப்.10
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி எனில், தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு ஏன் அவர் அழைக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன கேள்வியை முப்பியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
நௌபரை பிரதான சூத்திரதாரியாக அறிவிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் எவை என்பது தொடர்பில் அரசு, நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற அன்றைய தினம் இரவு நௌபர் மௌலவி கைது செய்யப்பட்டார். இவர் தாக்குதல் இடம்பெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் சஹ்ரானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக, விலகியிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.
நௌபர் மௌலவி , பிரதான சூத்திரதாரி என்றால் அவர் நிச்சயம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டிருக்க வேண்டும். என்றார். (ப-4)

# வெளிநாட்டுப் பொதிகளில் போதை மீட்பு

கொழும்பு,ஏப்.10
வெளிநாடுகளிலிருந்து தபால் மூலமாக, போலி முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட, 5 பொதிகளில் ஒரு தொகை போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
சுங்கப் பிரிவு அதிகாரிகள், கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து அவற்றை மீட்டனர்.
கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் 7 மில்லியன் ரூபா பெறுமதியானவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளிலிருந்து, வெரஹேர, ஹோமாகம மற்றும் கண்டி முகவரிகளுக்கு குறித்த பொதிகள் அனுப்பட்டுள்ளன. பொதிகளிலிருந்து 4 மில்லியன் ரூபா பெறுமதியுடைய குஷ் எனப்படும் 278 கிராம் கஞ்சா, 3 மில்லியன் ரூபா பெறுமதியான 'எக்ஸ்டஸி' என்று அழைக்கப்படும் 400 போதை மாத்திரைகள் என்பவை கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள், பொலிஸ் போதைப்பொருள் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ப-4)

# பயங்கரமானதோர் சூழலை அரசு ஏற்படுத்துகின்றது!!!

## மணியின் கைது விடயம் சட்டவிரோதம் என்று சுட்டிக்காட்டி சிறீகாந்தா அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 10
உள்ளூராட்சி அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பிரயோகித்திருப்பதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்ததாக பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள் ளதும், பயங்கரமானதோர் சூழலை ஏற்படுத்தும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என, தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.சிறீகாந்தா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மணிவண்ணன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்ட விரோதமானது.
காவல்படை பற்றிய தவறான அல்லது திரிபுபடுத்தப்பட்ட வியாக்கியானத்தின் அடிப்படையில் மாநகர முதல்வர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நாம் கருதுகின்றோம்.
ஏனெனில், காவல் படை என்ற பெயருடன், ஐந்து மாநகர சபை ஊழியர்களை உள்ளக்கி அறிவிக்கப்பட்ட குறித்த காவல் படை, அதன் நோக்கங்கள், பணிகள் என்பனவற்றின் அடிப்படையில் ஓர் பொலிஸ் படையாக ஒருபோதுமே கருதப்பட முடியாதது.
நகரின் சுகாதார மேம்பாட்டை பிரதான நோக்கமாகக் கொண்ட இந்தக் குழுவுக்கு சூட்டப்பட்டிருக்கும் 'காவல் படை' என்ற தமிழ்ப் பெயரை அடிப்படையாக வைத்து, அதனை பொலிஸ் படையாக அர்த்தப்படுத்துவது என்பது தவறானது.
மேலும், இதற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாநகர சபை பணியாளர்களில் எவருக்கும், வழக்கமாக பொலிஸாருக்கு வழங்கப்படும் எந்தவொரு பயிற்சி நெறியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, ஓர் குண்டாந்தடி கூட, எவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.
தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் சீருடைகளை ஒத்த விதத்திலேயே, இந்த மாநகர சபை ஊழியர்களின் சீருடைகளும் அமைந்திருந்தன. இருந்தும், காவல் படை என்ற பெயரும், சீருடையின் நிறங்களும் அநாவசிய சந்தேகத்துக்கு அடி கோலியுள்ளன.
இந்த அமைப்பை நிறுவியதன் மூலம் சட்ட ஏற்பாடுகள் எவையாவது மீறப்பட்டிருந்தால், சாதாரண சட்டத்தின் கீழ் தாராளமாக நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும், மாறாக, பயங்கரவாத தடைச் சட்டத்தை இந்த விவகாரத்தில் அரசு பிரயோகித்திருப்பது யதார்த்தபூர்வமான அணுகுமுறையோ அல்லது நீதியான நடவடிக்கையோ அல்ல.
மாநகர முதல்வருக்கும், மாநகர சபைக்கும் எதிராக முறைப்பாடளித்தவர்களும், நாடாளுமன்றத்தில் இந்த விவகாரத்தை எழுப்பி, உரத்துக் குரல் கொடுத்த எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தியும் குறுகிய அரசியல் நோக்கங்களுடன் செயற்பட்டுள்ளன.
எலிகளை பிடிப்பதற்காக வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் பூனைகள் தொடர்பில், அவை புலிகளை ஒத்திருக்கின்றன என்று கூறுவதோ அல்லது கருதுவதோ, பாரபட்சமின்றி எந்த நியாயத்தின்படியும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம், என்றுள்ளது. (ஒ.26,20)

# சர்ச்சையை ஏற்படுத்திய தேசியக்கொடி

கொழும்பு,ஏப்.10
காலி முகத்திடலில் வழமையாக ஏற்றப்பட்டிருக்கும் இலங்கையின் விசாலமான தேசியக் கொடி, சிறிது நேரம் மாயமானதால், சமூக வலைத்தளங்களில் பல்வேறுபட்ட கருத்துக்கள் பதிவிடப்பட்டிருந்தன.
காலி முகத்திடலில், கொடிக்கம்பத்தில் தேசியக் கொடி தினமும் பறந்த வண்ணமே காணப்படும்.
எனினும் மழை காரணமாக நேற்றுக் காலை ஏற்றப்பட்ட கொடி, சிறிது நேரத்தில் இறக்கப்பட்டிருந்தது.
ஈரமான கம்பம் காய்ந்த பின்னர் மீண்டும் கொடி ஏற்றப்பட்டிருந்தது. இது வழமையான நடைமுறை என்று தெரிவிக்கப்படுகிறது.
இதனால் கொடி இல்லாது வெறிச்சோடிய காலிமுகத்திடல் தொடர்பில் பலர் தமது கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தனர். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எக்காலமும் ஏமாற்றமுடியாது

ஈஸ்டர் தினத் தாக்குதல் பேரவலம் நடந்து ஒருவருடம் கடந்து விட்ட நிலையில் இன்னும்கூட அந்தக் கொடூர நடவடிக்கைக்குக் காரணமானவர்கள் அல்லது குற்றவாளிகள் என அடையாளம் காட்டப்பட்டவர்கள் அனைவரும் சந்தேக நபர்களாக மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இது, இந் நாட்டின் சட்டம்,ஒழுங்கு, நீதி, பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையினர் அனைவரதும் பலவீனமான கட்டமைப்புத் தன்மையை அல்லது ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் நீதி விசாரணையை தீவிரப்படுத்தி உண்மையான குற்றவாளிகளை மக்கள் மத்தியில் இனம்காட்டி அவர்களுக்குரிய தண்டனையை விரைவாகப் பெற்றுக்கொடுப்பதில் காட்டும் அக்கறையின்மையை வெளிப்படுத்துவதாகவே சந்தேகம்கொள்ள வைக்கிறது.

ஓராண்டு காலமாக இந்த விடயமானது ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் வெறும் விவாதப் பொருளாகவே தொடர்கிறது. அது அசிங்கமானதும் வெட்கக் கேடானதுமானதுமான விடயமாகவே தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பார்க்கப்படுகிறது. அவ்வாறே மனித உரிமைகள் அமைப்புக்களையும் ஆர்வலர்களையும் அர்த்தம்கொள்ள வைத்துள்ளது.

இருதரப்பு அரசியல்வாதிகளும் ஆளையாள் மாறிமாறிக் குற்றம் சுமத்திவருகின்றனர். அவ்வாறு இருப்பதுதான் நடைபெற்று முடிந்ததாகக் கூறப்படும், அது தொடர்பான விசாரணை குழு அறிக்கை முடிவுகள் அல்லது அது வெளிப்படுத்த முனைந்துள்ள உண்மைகளையும் ஏதோவொரு உள்நோக்கத்துடன் பதிவு செய்துள்ளதாக எழுப்பப்படும் சந்தேகங்களை வலுப்படுத்துகின்றன.

எது எப்படி இருந்தாலும், ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் இருதரப்பும் அன்றாடம் முன்வைக்கும் வாதப்பிரதிவாதங்களும் இரு தரப்புக்களில் இருந்தும் உயர் பொறுப்பானவர்கள் மாறிமாறி விடுத்துவரும் அறிக்கைகளும் ஒரேயொரு விடயத்தை மட்டும் மிகத் தெளிவாக ஊர்ஜிதம் செய்கின்றன .

அதாவது இந்த நாசகாரத் தாக்குதலுக்கு காரணமான சக்திகளுக்கும் நாடாளுமன்றின் உள்ளேயும் வெளியேயும் உலாவரும் சில அரசியல் முக்கியஸ்தர்களுக்கும் இடையே நேரடியாகவோ மறைமுகமாகவே ஏதோவொரு ரீதியில் நெருக்கமான அல்லது ஏதோவொரு வகையில் புரிந்துணர்வுடன்கூடிய தொடர்புகள் இருந்திருக்கின்றன என்பதே அவ்வாறு உறுதிப்படும் விடயம்.

அதன் வெளிப்பாடே ஈஸ்டர் கொடூரம் தொடர்பாக தற்போது நடந்து வரும் அறிக்கை யுத்தம் எனலாம். அந்த வகையில் சட்டம்,நீதிப் பொறிமுறையைச் சேதப்படுத்தாது இழுத்தடிக்கும், காலதாமதப்படுத்தும் நகர்வானது, எவரை? எந்த முக்கியஸ்தர்களை காப்பாற்ற அல்லது மாட்டி வைக்கக் கையாளும் மூலோபாயமாக கையாளப்படுகிறது ? என்ற மக்களின் மனக் குழப்பங்களுக்கு விடையைத் தெளிவாக மக்கள் முன்வைக்கும் துணிச்சல் ஆட்சியாளருக்கு இல்லையோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

சாரா உயிருடன் இருந்தால்...!
நௌபர் மௌலவி அரசின் தயாரிப்பா?
மௌலவி என்பவர் பிரதான சூத்திரதாதி அல்ல...!
நல்லாட்சி அரசின் பலவீனமே தாக்குதலுக்கு காரணம்!
தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்புக் கூற வேண்டும்!
என அன்றாடம் வெளிவரும் அறிக்கைகள், அது தொடர்பான அறிவிப்புகள் ஒரு பொறுப்புள்ள அரசின் மனோதர்மத்தை வெளிப்படுத்துவதாக இல்லை.
ஒரு சிலரின் பெயர்களைக் கூறி வாயை அடைக்க முயலாதீர்கள் என்ற அரசை நோக்கிய பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் சீற்றத்தில் அர்த்தம் இருக்கிறது. அத்துடன் நியாயமும் இருக்கிறது.

ஆனால் ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளைக் கத்தோலிக்கர்கள் நம்ப வேண்டும் என அமைச்சர் வீரசேகரவின் கோரிக்கை வெறுமனே சமாளிக்கும் உத்தியை அடிப்படையாகக் கொண்டதே!
சிலரைப் பல காலமும், பலரைச் சிலகாலமும் ஏமாற்றலாம் ஆனால் எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்ற முடியாது என்பதை அதிகார பீடத்தில் இருந்து கொண்டு அறிக்கை விடுவோர் புரிந்துகொள்வது மிக முக்கியம்.




### யாழ். காவல் அணி குறித்து

# புலனாய்வுப் பிரிவு முன்கூட்டியே ஏன் தகவலைத் திரட்டவில்லை?

கொழும்பு, ஏப். 10
'யாழ்ப்பாணம் மாநகரசபை மேயரால் உருவாக்கப்பட்ட தனி காவல் அணி தொடர்பான தகவல்களை புலனாய்வுப் பிரிவு ஏன் முன்கூட்டியே வெளியிடவில்லை? புலனாய்வு பிரிவு இன்னும் சரியாக வழிநடத்தப்படவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்' என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:'புலனாய்வுப் பிரிவு சிறப்பாக செயற்படுகின்றது என்று அரசு கூறும் நிலையில், யாழ்ப்பாணம் மேயர் தனிக்குழுவொன்றை காவல் அணியாக உருவாக்கியுள்ளார். இது தொடர்பான தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே சபைக்கு தெரியப்படுத்தினார்.
அப்படியானால் புலனாய்வுப் பிரிவு எங்கே?. தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் எனக்கூறியே தற்போதைய அரசு ஆட்சிபீடமேறியது. எனவே, புலனாய்வுப் பிரிவு சரிவர செயற்படுகின்றது. தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி உரிய தலையீடுகளை மேற்கொள்கின்றாரெனில், மேயரால் உருவாக்கப்பட்ட காவல் அணி தொடர்பான தகவல்களை முன்கூட்டியே தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? இப்படியொரு சம்பவம் நடைபெறவுள்ளது. அதனை தடுத்துநிறுத்துமாறு முன்கூட்டியே புலனாய்வுப் பிரிவால் தகவல் வழங்க முடியாமல் போனது ஏன்?
எனவே, புலனாய்வுப் பிரிவு உரிய வகையில் செயற்படவில்லை என்பது உறுதியாகின்றது. பாதுகாப்பு அமைச்சரும் தனது கடமையை சரிவர நிறைவேற்றவில்லை. தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது உண்மை. ஆனாலும் அதுபற்றி முன்கூட்டியே கட்டாயம் அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தியே இந்த அரசு ஆட்சிபீடமேறியது' என்றார். (ம-44)

# கை கழுவ மேலும் சில இடங்கள்

### சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஏப். 10
சாவகச்சேரி நகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் கை கழுவும் இயந்திரங்கள் வைக்கப்படவுள்ளன.
கொரோனாத் தொற்றுக் காரணமாக கை கழுவுதல் அவசியம் என்பதால் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இவை வைக்கப்படவுள்ளன. அதற்காக 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நகர சபை தவிசாளர் தெரிவித்தார். (த-9)

# சட்ட நடவடிக்கைகளுக்கான ஆலோசனைக்குழு நியமனம்

கொழும்பு,ஏப்.10
சட்ட நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்தும் நோக்கில், நீதியமைச்சின் கீழ் திட்ட வழிநடத்தல் பிரிவை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிலையில் நீதியமைச்சின் சட்டத்தரணி ஜி.ஜி.அருள்பிரகாசத்தின் தலைமையில் ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.
நீதியமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், பதிவாளர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
வழக்கறிஞர் கட்டளைச் சட்டங்கள், நோட்டரி கட்டளைச் சட்டம், ஆவணங்களின் பதிவு தொடர்பான சட்டம் உள்ளிட்டவற்றில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் உறுப்பினர்களால் ஆராயப்படும்.
இந்தச் சட்டங்கள் சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் நடைமுறைக்கு வந்தன. அதன் பின்னர் சில சட்டங்களில் திருத்தங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு, மஞ்சள் துணிகள் வைத்திருந்தாலும் கைதா?

## கேள்வி எழுப்புகிறார் மன்னார் நகரசபைத் தவிசாளர்

**மன்னார், ஏப். 10**

**யாழ்ப்பாண மாநகர காவல் படையின் சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவற்றுறையினரின் சீருடையை ஒத்ததாக இருந்தது எனத் தெரிவித்து யாழ்ப்பாணம் மாநகர மேயர் மணிவண்ணனைக் கைது செய்துள்ளார்கள். நீலம், சிவப்பு, மஞ்சள் வர்ணங்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தியவைதான். அப்படியானால் அவற்றை வைத்திருந்தாலும் கைது செய்வீர்களா? இவ்வாறு மன்னார் நகர சபைத் தவிசாளர் டா.அன்ரன் டேவிட்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

மணிவண்ணனின் கைதுநடவடிக்கையைக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண நகரைத் தூய்மையாக வைத்திருப்பதுதான் மணிவண்ணனின் குறிக்கோள். அதற்காகவே காவல் படை ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு மாநகர சபையைப் பின்பற்றியே அவர் சீருடையும் தயார் செய்திருந்தார். இந்த நிலையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மணிவண்ணனைக் கைது செய்தமையை ஒருபோதும் ஏற்க முடியாது. சமூக வளர்ச்சியில் அக்கறை கொண்டு தமிழர்கள் செய்யும் செயற்பாடுகளை அரசு தவறான கண்ணோடு நோக்கக்கூடாது - என்றுள்ளது. (ஒ.213)

# மணிக்கு ஆதரவாக குரல்கொடுக்க பின்னிற்கும் முதல்வர்கள் ஒன்றியம்

## தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

நகர ஒழுங்குபடுத்தல்களுக்கு பொலிஸாரையே மேயர் பயன்படுத்தியிருக்கவேண்டும். அவர் தனியான காவல் படையை உருவாக்கியது தவறு என்ற அடிப்படையில் இலங்கையிலுள்ள மேயர்களை உள்ளடக்கிய முதல்வர்கள் ஒன்றியத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார் என்று, வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை உள்ளூராட்சி அதிகார சபைகளின் சம்மேளனம் மற்றும் மாநகர முதல்வர் ஒன்றியம் ஆகியவற்றின் கவனத்துக்கு யாழ்ப்பாண மாநகர மேயர் மணிவண்ணனின் கைது தொடர்பான விடயத்தை தொலைபேசியில் தெரியப்படுத்தினேன்.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் தலைவர், குருநாகல் மாநகர முதல்வர் துஸார சஞ்சீவ, இவ்விடயம் தற்போது பொலிஸ் விசாரணையில் இருப்பதனாலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குள் இருப்பதனாலும், தாம் உரியசட்ட ஏற்பாடுகளுடன் தலையிடுகிறேன் எனத் தெரிவித்தார். இதேவேளை இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் என்ற வகையில் முதல்வருடைய கைது தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சருடன் தாமதமின்றி இவ்விடயம் குறித்துப் பேசவுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் மேயர்களை உள்ளடக்கி முதல்வர்கள் ஒன்றியத்தின் தலைவராகவுள்ள மொரட்டுவை மாநகர முதல்வர் டபிள்யூ. சந்திமல் பெர்னாண்டோவுக்கும் விடயத்தை தெரியப்படுத்தினேன். ஊடகம் ஊடாக இவ்விடயம் பற்றித் தாம் தெரிந்து கொண்டதாகக் குறிப்பிட்டார். அத்துடன் நகர ஒழுங்கு படுத்தல்களைச் செய்வதற்கு பொலிஸாரையே முதல்வர் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்றார். இது தங்கள் அபிப்பிராயம் சார்ந்த விடயமாக இருக்கின்ற நிலையில் தாங்கள் நாட்டில் உள்ள முதல்வர் களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைப்பு என்ற வகையில் தலையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன், என்றுள்ளது. (ஒ)

# மரிக்கார் எம்.பி.க்கு மூளையில்லையாம்!

## சபை அமர்வில் வாதம்



கொழும்பு, ஏப். 10

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்காருக்கு மூளை யில்லை என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

'எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அவமதிக்கும் வகையில் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ செயற்படுகின்றார். அவர் கடந்த காலங்களில் நாடாளுமன்ற நாற்காலிகளை உடைத்தவர். பைபிளையும் தூக்கி எறிந்தவர். நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களின் மதிப்பையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு உள்ளது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன், "அவருக்கு மூளையில்லை. நாடாளுமன்றத்தில் பைபிள் இல்லை. கத்தோலிக்க மதத்தை அவமதிக்கவேண்டாம். அவர் இப்போதும் ஆளும் கட்சியில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார். நான் எந்தவொரு எதிர்க்கட்சி உறுப்பினரையும் அவமதிக்கவில்லை" - என்றார். (ஒ.இ)

# பொய்யான குற்றச்சாட்டுக்களால் அரசை பலவீனப்படுத்த முடியாது

## போக்குவரத்து அமைச்சர் இறுமாப்பு

கொழும்பு.ஏப்.10

பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசைப் பலவீனப்படுத்த முடியாது. அரசின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பலவற்றை, குறுகிய காலத்தில் செயற்படுத்தியுள்ளோம். சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தை 2023 ஆம் ஆண்டுக்குள் முழுமையாகச் செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வாறு போக்குவரத்து துறை அமைச்சர் காமினி லொக்குகே, பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (ப-4)

# கொழும்புக்கு ஒரு சட்டம் யாழுக்கு வேறொரு சட்டமா?

கொழும்பு, ஏப்.10

கொழும்புக்கு ஒரு சட்டம், யாழ்ப்பாணத்துக்கு வேறொரு சட்டமா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்தயாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் மணிவண்ணன் ரி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை சபையின் கவனத்தை ஈர்த்தன.

இதன்போது கருத்து வெளியிட்ட சாணக்கியன் எம்.பி., "யாழ்ப்பாணம் மேயர் கைதுசெய்யப்பட்டதையடுத்து பிரதேச மட்டத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள் எம்முடன் கலந்துரையாடுகின்றனர். என்னை கைதுசெய்யுமாறு



சேயான் சேமசிங்க எம்.பி. வலியுறுத்துகின்றார். யாழ். மேயர் செய்தது என்ன? கொழும்பு மாநகரசபையின் ஊழியர்கள் நீல உடை அணிந்து கொண்டு ரிக்கெட் உடைக்கின்றனர். இந்நிலையில் யாழ். மேயரும் அதேபோன்ற தொரு சீருடையை அறிமுகப்படுத்தியுள்ளார். இதற்காக கைதுசெய்ய முடியுமா?, கொழும்புக்கு ஒரு சட்டம் யாழுக்கு வேறொரு சட்டமா?" எனக் கேள்வி எழுப்பினார். (ந-44)

# கொலைகாரன் சபைக்கு வர அனுமதித்தவர் சபாநாயகர்!!

## சஜித் பிரேமதாச சாட்டையடி

நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் மேற்கொண்டு சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு கொலைகாரனை அனுமதித்த சபாநாயகர், ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கு ஏன் அவசரப்படுகின்றார் என்று எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடியபோது. ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றிய சஜித் பிரேமதாச,

ரஞ்சனை சபையிலிருந்து வெளியேற்றுவதற்கு அரசு சூழ்ச்சி செய்கின்றது. அதில் சபாநாயகரும் பங்குதாரர். கம்பஹா மாவட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிப்பது மக்கள் ஆணைக்கு விரோதமான செயல்.

ரஞ்சன் தொடர்பில் சபாநாயகர் மேற்கொண்ட தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது. அவர் இந்த நாட்டின் குடிமகன் என்ற அடிப்படையில் அவரது சிவில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார்.

ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பிரேமலால் ஜெயசேகரவுக்கு கொலைக் குற்றத்துக்காக மரணதண்டனை வழங்கப்பட்டது. அவர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்வதற்கும், சபை அமர்வுகளில் கலந்துகொள்ளவும் சபாநாயகர் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொலைகளுடன் தொடர்பென சுத்தா கைது

கொழும்பு.ஏப்.10
பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில், பாதாள உலகக் குழுவின் உறுப்பினரான லொகுகேலசந்த பிரதீப் என்ற தங்கல்ல சுத்தா கைதுசெய்யப்பட்டுள்ளார்.
நீர்கொழும்பு பகுதியில் பொலிஸ் குற்றப்பிரிவினர் முன்னெடுத்த விசேட தேடுதலில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
ஹொரணையைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் 2006 ஆம் மற்றும்2007ஆம்ஆண்டுகளில் மாத்தறையில் பல நபர்களைக் கொலை செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
அத்துடன் சந்தேகநபருக்கு தங்குமிடம் வழங்கிய குற்றச்சாட்டில், மற்றொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)

## கைதான பிக்கு பிணையில் விடுதலை

கொழும்பு, ஏப். 10
பொலிஸ் வாகனத்துக்குச் சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஜம்புரேவெல சந்தி ரரத்தன தேரர் என்ற பிக்கு பொலிஸ் பிணையில் நேற்றுமுன்தினம் மாலையே விடுவிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்தார்.
கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸ் வாகனத்துக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் பிக்கு உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சில மணி நேர விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக கோட்டைப் பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ.இ)

# போர்க் காலத்தை விடவும் அச்சமான சூழல் இப்போது!

## தே.எண்ணெய் விவகாரத்தை வைத்து அரசை தாக்குகிறது எதிரணி

**கொழும்பு, ஏப். 10**
**போர்க்காலத்தை விடவும் இப்போது மிகவும் அச்சமான சூழலை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. தேங்காய் எண்ணெயை விடவும் வேறு சில உணவுப் பொருள்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் காணப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. அவற்றை ஜனாதிபதி வெளிப்படுத்தவேண்டும்.**



இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாவால் கடந்த ஆண்டு சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாட முடியவில்லை. இந்த ஆண்டு தேங்காய் எண்ணெய் பிரச்சினையால் கொண்டாட முடியவில்லை. மக்கள் பாவம். உயிருக்கு உலைவைக்கக் கூடிய இந்தப் பிரச்சினையை அரசு தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.
இலங்கை தர நிர்ணயக் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்று, தேங்காய் எண்ணெயை விடவும் வேறு சில உணவுப் பொருள்களிலும் புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் காணப்படுவதாகத் தெரிவித்தார்.
இலங்கை தர நிர்ணயக் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக ஜனாதிபதி கோத்தாபயவே இருக்கின்றார். 20ஆவது அரசமைப்பு திருத்தம் ஊடாக சகல அதிகாரங்களையும் தன்வசப்படுத்தியவராகவும் அவர் இருக்கின்றார். அப்படியானால் எந்தெந்த உணவு வகைகளில் புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் இருக்கின்றது என்பதை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார். (ஒ.இ)

## தே.எண்ணெய் மாதிரிகளில் இரசாயனம் இருப்பது உறுதி

கொழும்பு.ஏப்.10
தங்கொட்டுவவில் கைப்பற்றப்பட்ட தேங்காய் எண்ணெயில், அஃப்லரொக்ஸின் இரசாயனம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுதத்த சில்வா தெரிவித்தார்.
கடந்த 28 ஆம் திகதி 55 ஆயிரம் லீற்றர் தேங்காய் எண்ணெய் அடங்கிய இரண்டு தாங்கி ஊர்திகள், தங்கொட்டுவப் பகுதியில் வைத்து, பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அவை சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.
இரண்டு எண்ணெய்த் தாங்கிகளிலும் இருந்து பெறப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தியதில், இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.
குறித்த மாதிரிகள், இலங்கை தர நிர்ணய நிறுவகம், சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்புப் பரிசோதனைப் பிரிவு மற்றும் அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் சுங்க நிவாரணப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
இரண்டு தேங்காய் எண்ணெய்த் தாங்கிகளுக்கான அனுமதியை உணவு கட்டுப்பாட்டுச் சபை, மற்றும் தர நிர்ணய நிறுவகம் வழங்கியுள்ளனவா? என்பது தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
குறித்த எண்ணெயை நாட்டுக்குக் கொண்டு வந்த நிறுவனங்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

## பஸ்ஸை செலுத்தினாரென 15 வயதுச் சிறுவன் கைது

கொழும்பு,ஏப்.10
பஸ்ஸொன்றைச் செலுத்திச் சென்றார் என்ற குற்றச்சாட்டில், 15 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் மிட்டெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
பொதுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட 53 இருக்கைகள் கொண்ட பஸ்ஸை, வீரகெட்டியவிலிருந்து மிட்டெனியவுக்கு குறித்த சிறுவன் செலுத்திச் சென்ற போது, வாகனங்களை ஆய்வு செய்யும் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.
அத்துடன் பிரதான வீதியில் பஸ்ஸைச் செலுத்த சிறுவனை அனுமதித்தமைக்காக, சிறுவனின் தந்தையாரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ப-4)

## சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டம்; போக்குவரத்துச் சேவைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 10
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பிலிருந்து தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்களுக்காக சகல வகையான போக்குவரத்துச் சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
வழமையான பயணிகள் சேவைக்கு மேலதிகமாக இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஆயிரத்து 192 பேருந்துகளும், தனியாருக்குச் சொந்தமான ஆயிரத்து 800 பேருந்துகளும், 21 ரயில்களின் 57 பயண சேவைகளும் புத்தாண்டை முன்னிட்டு இடம்பெறவுள்ளன.
நேற்று ஆரம்பமான இந்தச் சேவை எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. (ஒ.இ)

## மிளகின் கொள்விலை ரூ. 800

கொழும்பு, ஏப்.10
ஒரு கிலோ மிளகை 800 ரூபாவுக்கு கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.
கரும்பு, சோளம், மரமுந்திரிகை மற்றும் மிளகு உள்ளிட்ட சிறிய பெருந்தோட்ட உற்பத்தி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
இந்த கொள்வனவில் அரசாங்கம் தலையிடுவதற்கு முன்னர் இடைத்தரகர்களால் ஒரு கிலோ மிளகு 300 ரூபாவுக்கும், 400 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் கொள்வனவு செய்யப்பட்டது. நாடு முழுவதும் மிளகு உற்பத்தியாளர்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு அரசாங்கம் இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. (ஐ-இ)

## இளவரசர் பிலிப் காலமானார்

லண்டன், ஏப்.10
பிரிட்டிஷ் அரசி இரண்டாம் எலிசபெத்தின் கணவரும் இளவரசருமான பிலிப், தனது 99ஆவது வயதில் காலமானார். இந்த தகவலை பக்கிங்காம் அரண்மனை அறிவித்துள்ளது.
"மாட்சிமை வாய்ந்த இளவரசரின் உயிர் இன்று (நேற்று) காலை வின்சர் கோட்டையில் அமைதியான முறையில் பிரிந்தது," என்று அரண்மனை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பிரிட்டிஷ் வரலாற்றில் நீண்ட காலம் வாழ்ந்த அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்த எடின்பரோ கோமகன், கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி மருத்துவமனையில் ஒரு மாதம் சிகிச்சை பெற்ற பிறகு வின்சர் கோட்டைக்கு திரும்பினார்.
1947ஆம் ஆண்டில் இளவரசி எலிசபெத் அரசியாவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக அவரை இளவரசர் திருமணம் செய்து கொண்டார். பிரிட்டிஷ் அரச குடும்ப வரலாற்றில் நீண்ட காலம் சேவையாற்றியவர். கோமகனின் மறைவுச் செய்தியைத் தொடர்ந்து பக்கிங்காம் அரண்மனையின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. அவரது இறப்புச் செய்தி அடங்கிய அறிவித்தல்கள் வாயில்களில் ஒட்டப்பட்டுள்ளன. (எ)

## சர்வதேச விமான சேவைகள் ஆரம்பம்

கொழும்பு.ஏப்.10
கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து 11 சர்வதேச விமான நிறுவனங்கள் மீண்டும் நேரடி விமான சேவைகளை ஆரம்பித்துள்ளன என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
கட்டார் விமான சேவை, எமிரேட்ஸ் துருக்கி விமான சேவை, குவைட் விமான சேவை, உக்ரைன் விமான நிறுவனம், ஓமான் விமான நிறுவனம் ஆகியவை இதில் இடம்பெற்றுள்ளன.
கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு முன்னர் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 35 விமான நிறுவனங்கள் இலங்கையுடன் விமான சேவைகளை மேற்கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஏப். 10

375 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த சாவகச்சேரி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த பெண்ணுக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையும், 20 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது குற்றத்தை ஒப்புக் கொண்ட பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன், 20 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (ஜ-9)

## மதுவரித் திணைக்களத்துக்கு ரூ.36 பில்லியன் வருமானம்

கொழும்பு,ஏப்.10

கடந்த 3 மாதங்களில் மதுவரித் திணைக்களம் 36 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளது. இது வரலாற்றில் என்றுமில்லாதவாறு பதிவு செய்யப்பட்டுள்ள அதிகூடிய வருமானம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின் கடந்த 3 மாதங்களில், 36 பில்லியன் ரூபா வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது என்று மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஜி.குணசிறி தெரிவித்துள்ளார். (ப-4)

## மதுபோதையில் சாரத்தியம்; மூவருக்கு ஒரு லட்சம் தண்டம்

சாவகச்சேரி,ஏப்.10

மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், 40 மணி நேர சமூகப் பணி மேற்கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் சாரதிகள் மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம், மொத்தமாக 50 ஆயிரம் ரூபாவும் மதுபோதையில், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம்செலுத்திய மற்றொருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீதியொன்றில் ஐந்து பயன்தரு பழமரக் கன்றுகளை நடுகை செய்து பராமரிக்கும் 40 மணி நேர சமூகப் பணியில் இவர்களை ஈடுபடுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ஜ-9)

# அரசில்,அதிகாரத் தரப்புகளால் அழிகிறது பச்சிலைப்பள்ளி

### சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் துண்டுப் பிரசுரம்

பளை, ஏப்.10

**பளை பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.**

சமத்துவக் கட்சியின் சமூக பாதுகாப்புப் பிரிவின் பச்சிலைப்பள்ளி கிளையினரால் குறித்த துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. வளமான பச்சிலைப்பள்ளியின் வளமெல்லாம் கொள்ளையடிக்கப்படுகிறது. போர்க் காலத்தில் கூட இந்த அளவுக்குப் பச்சிலைப்பள்ளியில் அழிவு நடக்கவில்லை.

இப்பொழுது அதிகாரத்தரப்புகளும் அரசியல் தரப்புகளும் இணைந்து இந்த அழிப்பைச் செய்கின்றன. பச்சிலைப்பள்ளியில் பொதுமக்களுக்கும் பொதுத் தேவைகளுக்கு மாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அரச காணிகள் யாரென்றே முகம் காட்டாதவர்களுக்கெல்லாம் இரகசியமாகப் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன.

ஆனால், இங்குள்ள எமது மக்களில் பலருக்கு காணிகள் இல்லை. இதைப்பற்றி யாரிடம் முறையிடுவது? இதற்கு யார் தருவார் நீதி?

இந்தக் குறுகிய பிரதேசத்தில் மணலைத் தொடர்ந்து அகழ்ந்தால், நில அமைப்பு மாற்றத்துக்குள்ளாகி, கடல் நீர் உட்புகக்கூடிய அபாயம் ஏற்படும். அதுமட்டுமல்ல, மாரி காலத்தில் பெரும் வெள்ளப்பெருக்கும் ஏற்படக் கூடிய அபாயம் உண்டு. இவை இரண்டும் எமது பிரதேசத்தையே மக்கள் வாழமுடியாத நிலைக்கு உள்ளாக்கி விடும். ஆகவே இதை நாம் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காக நாம் ஒருங்கிணைவது அவசியம், என்றுள்ளது. (ஜ-214)



## பாடசாலைக்குள் புகுந்த கும்பல் அடாவடித்தனம்

### 4 மாணவர்கள் காயம்

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பகுதியில் உள்ள பாடசாலையொன்றுக்குள் அடாத்தாக புகுந்த கும்பலொன்று மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் நான்கு மாணவர்கள் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தும் இடம் தமக்குச் சொந்தமானது எனவும் அதில் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்த வேண்டாம் எனக் கூறியுமே மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக இந்தக் காணிப் பிரச்சினை இடம்பெற்று வந்த நிலையில், தற்போது அந்த நிலம் கல்லூரிக்கு சொந்தமானது என உறுதிப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நேற்றுக் காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்கு சென்ற குறித்த குழுவைச் சேர்ந்தவர்கள் மாணவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தும் இடத்துக்குச் செல்ல முடியாதவாறு தடிகளைப் போட்டு பாதையைத் தடை செய்தனர். எனினும், அங்கு ஆசிரியர்கள் வந்த பின்னர் மாணவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை உள்ளே நிறுத்தியபோது மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ப-26.20)

## அழுகிய நிலையில் மாட்டின் உடல்; அகற்றுவதில் நகரசபை அசமந்தம்



வவுனியா,ஏப்.10

வவுனியா புகையிரத நிலைய வளாகத்தை அண்மித்த பகுதியில் அழுகிய நிலையில் மாட்டின் உடல் ஒன்று காணப்படுவதால் சுற்றுப்புறச்சூழல் மாசடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுமுன்தினம் பயணித்த ரயிலில் மாடொன்று மோதுண்டு விபத்துக்குள்ளானது. சம்பவ இடத்திலேயே மாடு உயிரிழந்துள்ளது. அதனையடுத்து ரயில் நிலைய ஊழியர்கள் உயிரிழந்த மாட்டை அகற்றி ரயில் நிலைய வளாகத்தின் அண்மித்த பகுதியில் வைத்துள்ளனர்.

உயிரிழந்த மாட்டின் உடலை அகற்றுமாறு வவுனியா நகரசபைக்கு அறிவித்தல் வழங்கப்பட்ட போதிலும் அவ்விடத்திலிருந்து நேற்றுக் காலை வரை அது அகற்றப்படவில்லை.

உயிரிழந்த மாட்டிலிருந்து துர்நாற்றமும் வீசி வருகின்றது. இதன் காரணமாக சுற்றுப்புறச்சூழல் மாசடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் நகரசபையினரை தொடர்புகொண்டு கேட்டபோது;

குறித்த விடயம் தொடர்பில் எமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை சுகாதார பிரிவினருக்கு வழங்கியுள்ளோம். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றனர். (ஜ-18)

## தெரிவுக்குழு நியமனம்!

கொழும்பு, ஏப். 10

இலங்கை கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளது.

பிரமோதய விக்கிரமசிங்க தலைவராகவும், ஹெமெஷ் களுவிதாரண, ஹெமந்த விக்ரமரத்ன, வருண வராகொட, எஸ்.எச்.யு.கர்னைன், பி.ஏ.திலக நில்மினி குணரத்ன ஆகியோர் உறுப்பினர்களாகவும் பெயரிடப்பட்டுள்ளனர். (ம)

## வெளிவிவகார அமைச்சுக்கு 40பேர் புதிதாக உள்வாங்கல்

கொழும்பு, ஏப். 10

இலங்கை வெளிவிவகார அமைச்சில் 40 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

இலங்கை வெளிநாட்டுச் சேவை அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு அதிகாரமுடைய பொதுச் சேவை ஆணைக்குழுவால் வகுக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைய 40 பேர் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். அவர்கள் வெளிவிவகார அமைச்சிலும் வெளிநாட்டுத் தூதரகங்களிலும் கடமையாற்றுவர் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 196 பொலிஸ் நிலையங்களை புதிதாக அமைப்பதற்கு திட்டம்

## பொலிஸ் சேவைக்குள் 10,000 பேர் உள்ளீர்க்கப்படுவர்

**கொழும்பு,ஏப்.10**
**சட்டம் மற்றும் அமைதியை மேம்படுத்துவதற்காக, நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் தேவைக்கேற்ப 196 பொலிஸ் நிலையங்கள் புதிதாக அமைக்கப்படும். அத்துடன் பொலிஸ் சேவைக்குள் 10 ஆயிரம் பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்படுவர் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.**



அவரது ஊடகப்பிரிவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்கு உயிர் வாழும்வரை வழங்கப்படுகின்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், அவர்கள் உயிரிழந்த பின்னர் அவர்களிடம் தங்கி வாழ்வோருக்கு வழங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தற்போது அமைச்சரவைக்கு முன்வைக்கப் பட்டுள்ளது. போதைப்பொருள் ஒழிப்புக்காக புதிய தேசிய கொள்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் வெளியிடப்படும். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளிக்கும் போது மத உபதேசங்கள் பயன்படுத்தப்படவேண்டும்.

மத அடிப்படைவாதச் சிந்தனைகளைக் கொண்ட புத்தகங்களைத் தடை செய்வது குறித்த தீர்மானம், குறித்த ஒரு மதத்தை இலக்காகக் கொண்டு எடுக்கப்பட்டது அல்ல. பொதுவாக அனைத்து வகையான மத அடிப்படைவாதத்தையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டது.

பாதுகாப்புப் பிரிவினருக்குச் சொந்தமான, பயன்படுத்தப்படாத காணிகளில் தென்னை அல்லது வேறு பொருத்தமான பயிரினங்களைப் பயிரிடுவது அவசியம். அதற்காகப் பயன்படுத்தக்கூடிய காணிகள் இனங்காணப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றுள்ளது. (ப-4)

# சாணக்கியனிடமும் விசாரணை நடத்துக

## செஹான் சேமசிங்க வலியுறுத்து

கொழும்பு,ஏப்.10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனிடம், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க வலியுறுத்தினார். உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டில் அரச தரப்பினர் மீண்டுமொரு தாக்குதலை நடத்த திட்டமிடுகின்றனரா" என்று சாணக்கியன் சபையில் முன்வைத்துள்ள கருத்து மிகவும் பாரதூரமானதாகும். அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ள, உடனடியாக அவரை குற்றப்புலனாய்வுத் தகவல் திணைக்களத்துக்கு அழைக்க வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், அவர்களின் கருத்தியலை ஆதரிப்பவர்களுக்கு எதிராக எமது அரசு மீண்டுமொரு தாக்குதலை நடத்த திட்டமிடுவதாகக் கூறுகின்றனர். வேண்டுமென்றே உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்காதிருந்த எதிர்க்கட்சியினர் மீண்டுமொரு காட்டிக்கொடுப்புக்குத் தயாராகியுள்ளனரா என்று கேள்வியெழுப்புகின்றோம். அந்தவகையில் சாணக்கியனின் கருத்து தொடர்பில் எமக்குச் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. அவரது கூற்றுத் தொடர்பான உண்மை நிலையை அறிந்து நாடாளுமன்றுக்கும், நாட்டுக்கும் வெளிப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

# பிரெண்டிக்ஸ் ஊழியர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்

## 6 தொழிற்சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு,ஏப்.10
மினுவாங்கொடை பிரெண்டிக்ஸ் நிறுவன ஊழியர்களின் தொழில் உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அவர்களுக்கு அரசு உடனடி நிவாரணத்தை வழங்க வேண்டும் என்று 6 தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

வர்த்தக கைத்தொழில் தொழிலாளர் சங்கம், வியர்வைத் துளிகளின் கூட்டமைப்பு, இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம், மனித மேம்பாட்டுக்கான புரட்சிகர அமைப்பு, எழுந்து நில் தொழிலாளர் சங்கம், கடற்பயணிகளின் தேசிய ஒன்றியம் ஆகிய தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதியன்று மினுவாங்கொடவிலுள்ள பிரெண்டிக்ஸ் தொழிற்சாலையில் பணியாற்றிய ஆயிரத்து 400 பணியாளர்களில் 100 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அங்கு தொழில் உரிமை மீறல்கள் நடந்திருக்குமாயின், அதனை விசாரணை செய்யுமாறு குழுவொன்றை தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமித்தார்.

குறிப்பிட்ட குழுவின் விசாரணை அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. விசாரணைகளின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்தும் தெரியவில்லை.

எனவே உடனடியாக இந்த விசாரணை குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுங்கள்.

தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுங்கள். முதலாளிமார்களுக்குச் சாதகமாக செயற்படாது, ஆடை தொழிற்சாலையில் தொழில் புரியும் ஒவ்வொரு தொழிலாளர்கள் மீதும் கரிசனையுடன் செயற்பட்டு அவர்களுக்கு நியாயத்தை அரசு வழங்க வேண்டும் என்று ஆறு தொழிற் சங்கங்களும் கூட்டாக இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளன. (ப-4)

# பாடசாலைகளுக்கு 9 நாள்கள் விடுமுறை

கொழும்பு, ஏப்.10
நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச பாடசாலைகளதும் முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 19 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ப-4)

# 98 கடவுச்சீட்டுக்களுடன் சந்தேகநபர்கள் கைது

கொழும்பு,ஏப்.10
வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில், மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 98 வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டன என்று பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சந்தேகநபர்களிடமிருந்து 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. குறித்த கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி, பலரை சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கு சந்தேகநபர்கள் முயற்சித்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)

# தோட்டத்தொழிலாளர்களை படுகுழியில் தள்ளும் அரசு

## இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.10
தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதாக கூறிவிட்டு, அவர்களை நசுக்கும் செயற்பாட்டை அரசும், தோட்டக் கம்பனிகளும் முன்னெடுத்துள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான, ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மலையக மக்களை பாதாளப் படுகுழியில் தள்ளிவிடும் சூழல் இன்று உருவாகியுள்ளது. ஆயிரம் ரூபா சம்பள விவகாரத்தில், கம்பனிகள் பல்வேறு அட்டூழியங்களையும், அநியாயங்களையும் மலையகத்தில் செய்வதைப் பார்க்கின்றோம். பல்வேறு நிபந்தனைகளைக் கம்பனிகள் முன்வைத்துள்ளன. இதனால் தமிழ் சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் மலையகத்தில் போராட்டம் நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்காக நாமும் களத்தில் இறங்கிப் போராட்டம் நடத்தத் தயாராக உள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)



# சரத்குமார கைது

கொழும்பு,ஏப்.10
தனது வீட்டின் நிலத்தடியில் அமைக்கப்பட்ட பதுங்கு குழியில் மறைந்திருந்த, பாதாள உலகக் குழு நபரான 'சீட்டி' எனப்படும் சரத்குமார கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் முல்லேரியா பகுதியில் முன்னெடுத்த சோதனையின் போது நேற்றுக் காலை இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த நவம்பர் மாதம் வெலிகமப் பகுதியில் மீட்கப்பட்ட ஹெரோய்ன் போதைப் பொருளுடன் தொடர்பென தேடப்பட்டு வந்த ஒன்பதாவது சந்தேக நபர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் இவர் அங்கொட லொக்காவுடன் தொடர்பிலிருந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனஜீவராசிகள் திணைக்களம் வவுனிக்குளத்தில் அடாவடி

## கட்டுப்படுத்துமாறு கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஏப்.10**
**முல்லைத்தீவு வவுனிக்குளத்தில் இடம்பெறும், வனஜீவராசிகள் திணைக்களத்தினரது அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துங்கள் என முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் வவுனிக்குளத்தின் கீழான கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
1957ஆம் ஆண்டு வவுனிக்குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டு இன்றுவரை விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வவுனிக்குளத்தை நீர்ப்பாசனத் திணைக்களம் சிறப்பாக நிர்வகித்து வருகின்றது. ஆனால் அண்மைக் காலமாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குளத்தின் சூழலில் விளம்பரப் பலகைகளை நட்டு குளத்தை தாங்களே பராமரிப்பவர்கள் போல அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.
வவுனிக்குளத்தின் நிர்வாகத்தை நடத்திவரும் நீர்ப்பாசனத் திணைக்களத்தைத் தவிர வேறு எந்தத் திணைக்க ளங்களும் குளத்தின் மீதோ அல்லது விவசாயிகள் மீதோ அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. வனஜீவராசிகள் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளை மாவட்டச் செயலாளர் கட்டுப்படுத்த வேண்டும்.
நீர்ப்பாசனத் திணைக்களத்தைத் தவிர வேறு எந்த திணைக்களங்களும் குளத்தின் நிர்வாகத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது என்றனர். (ப-13)

# மீண்டும் தடைப்பட்டது நயினாதீவு பஸ் சேவை

## பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம்.ஏப்.10
இலங்கை போக்குவரத்து சபையின் நயினாதீவுக்கான பஸ் சேவை மீண்டும் தடைப்பட்டதன் காரணமாக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் பயணிகள் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.
இதுவரை தடைபட்டிருந்த நயினாதீவுக்கான பஸ் போக்குவரத்துச் சேவை கடந்த 6 ஆம் திகதி வழமைக்குத் திரும்பியது.
எனினும் மீண்டும் பஸ் பழுதடைந்தமையால் நேற்றுமுன்தினம் காலையில் இருந்து பஸ் சேவை மீண்டும் தடைப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நயினாதீவு மக்கள், குறித்த பஸ் மிகவும் தரம் குறைந்த நிலையில் காணப்படுகிறது. அதனால் அடிக்கடி பழுதடைகின்றது. இதனால் நயினாதீவில் இருக்கின்ற ஓரே ஒரு போக்குவரத்து மார்க்கமும் தடைப்பட்டுள்ளது. இதனால் நாம் மிகவும் சிரமப்படுகின்றோம். எனவே எமக்கு புதிய பஸ் கிடைப்பதற்கு உரிய திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (ஜ-319)




# மாணவர் நாடாளுமன்றம்

மன்னார்.ஏப்.10
மன்னார் எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலயத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாணவர் நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் எம். எஸ். எம் அஸ்மி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினராக மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜேசுதாசன் ஜெனிற்றன் கலந்து கொண்டார்
நிகழ்வில் மன்னார் வலய கல்வி அலுவலர்கள், மன்னார் பிரதேச உப தவிசாளர், எருக்கலம்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-213)

# முல்லையில் நாற்று நடுகை மூலம் 180 ஏக்கரில் நெற் பயிர்ச்செய்கை

முல்லைத்தீவு, ஏப்.10
முல்லைத்தீவு மாவட்டத்தில் 180 ஏக்கரில் நெல் நாற்று நடுகைச் செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
துணுக்காய் மாந்தை கிழக்கு பகுதியில் 100 ஏக்கரிலும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 80 ஏக்கரிலும் இந்த நாற்று நடுகை மூலம் நெற்செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது.
நாற்று நடுகைக்காக விவசாயத் திணைக்களத்திடம் 13 இயந்திரங்கள் காணப்படுகின்றன. குறித்த இயந்திரங்கள் மூலம் களைகளையும் கட்டுப்படுத்தமுடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
இதேவேளை மாவட்டத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் விதை நெல் உற்பத்தியிலும் விவசாயத் திணைக்களம் ஈடுபடவுள்ளது.
இதேபோன்று விவசாயிகளும் மாவட்டத்தில் நிலவுகின்ற விதை நெல் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு விதை நெல் உற்பத்தியிலும் ஈடுபட வேண்டும் என்று அவர்களிடம் விவசாயத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஜ-13)



கொடிகாமம் நகரப்பகுதியில் உள்ள நாற்சந்தியில் சாவகச்சேரி பிரதேச சபையினரால் தன்னியக்க சமிக்ஞை விளக்குகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொருத்தப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் வாகன நெரிசல் மற்றும் சன நெருக்கடிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இவ் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (ந-9)

# கார்களுக்கு புதுக்குடியிருப்பில் தரிப்பிடம் இல்லை

## ஓட்டுநர்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஏப்.10
புதுக்குடியிருப்பு நகரில் கார் தரிப்பிடத்துக்கான கோரி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு 7 மாதங்கள் கடந்தும் இதுவரை அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் மகிழுந்து ஓட்டுநர்களுக்கு தரிப்பிட வசதி இல்லாத நிலையில் கார் ஓட்டுநர் ஒருவர் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இது குறித்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற அமர்வில் சபையின் உறுப்பினர்களால் கார் தரிப்பிடத்துக்கான இடம் வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் ஏழு மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் கார் தரிப்பிடம் பிரதேச சபையால் அமைக்கப்படவில்லை, அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (ப-19)



# புத்தாண்டுச் சந்தை

முல்லைத்தீவு, ஏப்.10
உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகங்களில் புத்தாண்டுச் சந்தை நேற்று ஆரம்பிக்கப்பட்டது. தொழில்துறை திணைக்களம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி பிரிவு ஆகியவற்றின் அனுசரணையில் இந்த சந்தை ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது மகளிர் சேமிப்பு திட்டத்தில் சிறந்த சேமிப்பை மேற்கொண்டவர்களுக்கும், சிறப்பாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் மாவட்டச் செயலரால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஜ-19)




ஊரும் உறவும் நெடுந்தீவு அமைப்பின் பணிமனை கடந்த புதன்கிழமை நெடுந்தீவு உதவி பிரதேச செயலர் கென்ஸ்மெனால், நெடுந்தீவு பிரதான வீதி பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் ஊரும் உறவும் அமைப்பின் துறைசார் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசியால் குருதி உறைதல் நோய்? பரிசோதனையில் இறங்கியது நிபுணர் குழு

கொழும்பு,ஏப்.10

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு குருதி உறைதல் நோய் ஏற்பட்டமை தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசேட மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழு பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.




கொழும்பிலுள்ள சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொவிட் தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டவர்களுக்குக் குருதி உறைதல் ஏற்பட்டுள்ளது என்று சில நாடுகள் தெரிவித்துள்ளன.

எனினும் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளமை குருதி உறைதலில் நேரடித் தாக்கம் செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசியைத் செலுத்திக் கொண்ட நபர்கள் 3 நாள்களின் பின்னர் அல்லது 3 வாரங்களுக்குள் எந்த நோய்க்காக சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனைக்கு வருகை தந்தாலும், குறித்த நபர் தொடர்பில் தகவல்களை வழங்குமாறு சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவால் விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இதற்காக 24 மணித்தியாலமும் இயங்குகின்ற அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விசேட மருத்துவ நிபுணர்கள் இருவர் இதற்காக பிரத்தியேகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மருத்துவமனைக்கு வந்த நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால், விசேட மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவர்களால் தொடர்ந்தும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் தடுப்பூசி செலுத்திக்கொண்டதால்தான், குருதி உறைதல் ஏற்பட்டுள்ளது என்பதற்கான காரணிகள் இனங்காணப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் தடுப்பூசியைச் செலுத்தி 4 வாரங்களின் பின்னர் குறித்த நால்வருக்கும் குருதி உறைதல் நோய் ஏற்பட்டுள்ளது.

வேறு சில நோய்களால் பாதிக்கப்பட்டோருக்குக் கூட குருதி உறைதல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. என்றார். (4)

# வன வளத்தைப் பாதுகாக்க 20 லட்சம் மரக்கன்றுகள்

கொழும்பு, ஏப்.10

இலங்கையின் வன வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில், 'பாதுகாப்புக்கான சூழல்' என்ற தொனிப்பொருளில், நாடு தழுவிய ரீதியில் 20 லட்சம் மரக்கன்றுகளை நடுகை செய்யும் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று கிராமப்புற வீதிகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார். அன்றைய தினம் றாகம போயிஸ்டவுன் பகுதியில் 6 ஏக்கர் நிலப் பரப்பில் மரக்கன்றுகள் நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

'பாதுகாப்புக்கான சூழல்' என்ற திட்டத்தின்கீழ் நான்கு வருடங்களில் 20 லட்சம் மரக்கன்று கள்நடப்படவுள்ளன.

இதன் ஒரு கட்டமாக இந்த வருடத்தில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும். விசேடமாக கம்பஹா மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் மரக்கன்றுகள் நடப்படும். நெடுஞ்சாலைகள் அமைச்சு, கிராமப்புற சாலைகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மகநெகும நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புக்களுடன் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

# மாகாண சபைத் தேர்தலை விரைவுபடுத்துவது அவசியம்

## துரைரெத்தினம் வலியுறுத்து

மட்டக்களப்பு,ஏப் 10

தனி மனித சுதந்திரம் பாதிக்கப்படாமலும், சிறுபான்மையினரின் உரிமைகள் மதிக்கப்படக்கூடியவாறும், தேர்தல் முறையை நடைமுறைப்படுத்த கட்சிகளுடன் கலந்துரையாடி, மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டியது அவசியம் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக மாகாண சபையில் மக்கள் ஆட்சி இல்லாமலாக்கப்பட்டு, ஒரு சில ஆளுநர்களின் பக்கச்சார்பான ஆட்சி முறை நடந்தேறி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மூவின மக்களும் வாழ்ந்து வருவதால், ஆளுநரால் அனைத்து மக்களையும் திருப்திப்படுத்தக்கூடியவாறு செயற்பட்டாக வேண்டும். ஒரு கட்சியைச் சார்ந்த செயற்றிட்டங்களை முன்வைப்பதால் நல்லாட்சி நடைமுறையில் இருக்காது.

பௌத்த மத குருக்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாதெனக் கூறுவது நாகரீகமான செயலல்ல. எனவே மூவின மக்கள் வாழுகின்ற கிழக்கு மாகாணம், ஜனநாயக ரீதியாக செயற்பட வைப்பதற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப-4)

# மின் பாவனையாளர்களின் வைப்புத் தொகைக்கு வட்டி

கொழும்பு,ஏப்.

லொகோ நிறுவனத்துக்குக் ஊடாக வழங்கப்பட்ட மின்சார இணைப்பின்போது மின்சாரப் பாவனையாளர்களால் செலுத்தப்பட்ட பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு, வட்டி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சட்டத்தின் கீழ் மின்சாரப் பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு வட்டி செலுத்தும் விழா, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுத் தலைவர் ஜானக்க ரட்ணாயக்க தெரிவித்ததாவது,

இலங்கை மின்சார சபை மற்றும் லொகோ மின்சார விநியோக நிறுவனம் ஆகியவை இலங்கையில் மின்சார பாவனையாளர்களுக்கான மின்சாரத்தை விநியோகிக்கின்றன.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குள்ள அதிகாரத்தின் மூலமாக லொகோ நிறுவனத்துடன் இணைந்து இந்தப் புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மின்சார பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு வட்டி செலுத்துவது மின்பாவனையாளர்களுக்கு சிறந்த அனுகூலமாகும். கடந்த காலங்களிலும் இந்த வட்டி செலுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வெளிப்படையான முறையில் வட்டி விகிதங்களை நிர்ணயிப்பதற்கான ஒரு வழிமுறையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உருவாக்கியுள்ளது.

இந்த ஆண்டுக்கான வட்டி 8.68 சதவீதமாகும். அந்த வட்டி விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு மின்சார சேவைகளை வழங்கும் உரிமம் பெற்ற நிறுவனங்கள் வட்டியைக் கணக்கிட்டு தங்கள் வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டும்.

மின்விநியோக உரிமதாரரான இலங்கை மின்சார தனியார் நிறுவனம் (லொகோ) தனது வாடிக்கையாளர்களுக்கு வட்டி செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் லொகோ நிறுவனத்தால் மாத்திரம் வருடாந்தம் 420 லட்சம் ரூபா தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.- என்றார். (ப-4)

# குண்டுத் தாக்குதல் விவகாரம்; மக்களை திசை திருப்ப முயற்சி

## அத்தநாயக்க குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில், உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதைப் புறந்தள்ளி, மக்களைத் திசை திருப்புவதற்கான நடவடிக்கைகளே அரசால் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார்? அதற்கான கட்டளைகள் யாரால் வழங்கப்பட்டன? இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார்? ஆகிய கேள்விகளுக்கான பதில்களையே பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர். எனினும் அந்த எதிர்பார்ப்பு இன்னமும் பூர்த்திசெய்யப்படவில்லை. நௌபர் மௌலவியே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று இருதரப்பு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர வெளியிட்டுள்ளார். உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, மக்களை வேறுபக்கம் திசை திருப்புவதற்கு முயற்சிப்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

ஆகவே இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் யார் யார் தொடர்புபட்டுள்ளனர் என்பது கண்டறியப்பட வேண்டும். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டும். -என்றார். (ப-4)

# வெலிக்கடை சிறைக்கு முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.10

மஹர சிறைச்சாலைக் கைதிகளின் உயிரிழப்புக்குக் காரணமான நபர்களைக் கைதுசெய்யுமாறு கோரி, வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்னால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவினர் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (ப-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 - 12 - 1954

இறப்பு 10 - 04 - 2020

## ஆசீர்வாதம் மேரி செலஸ்ரீன் (தவம்)

ஓராண்டு சென்றதம்மா ஆறவில்லை
தேறவில்லை நம் துயரம்
சீராட்டி பாராட்டி தாயாக தந்தையாக
பொறுப்புக்கள் பல சுமந்து
சிரித்த முகத்துடனே அன்பைக்
கலந்தென்னை வளர்த்தீரே
உங்கள் உயிரான பேர்த்திமாரும்,
அருமை மருமகனும்,
ஆருயிர் தம்பிமாரும், உற்றாரும், ஏங்கிப் பரிதவிக்கின்றோம்.
எம் முன்னே வந்திடுவீர் விண்ணுலக
தந்தையின் ஆசியுடன்.....

தவவாசா, கடற்கரை வீதி,
பருத்தித்துறை.
077 967 2871

குடும்பத்தினர்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
யாழ். நல்லூரில் இயங்கும்

# லிங்கா பெஷன் இன்

## மாபெரும் தள்ளுபடி

## சேலை வகைகளுக்கு

50% விசேட கழிவுகள்

இரண்டு
சேலை வாங்கினால்
ஒன்று இலவசம்


மேலும் பல ஆடைகளுக்கான
விசேட தள்ளுபடி



இல. 302A, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

Tele No : 021221 4999 www.Lingaa.lk
WhatsApp : 076 644 0722 www.Fb.com/Lingaa.lk

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 20 - 11 - 1933

இறைவன் அடியில் 28 - 03 - 2021

## திரு. பொன்னையா கந்தசாமி

முன்னாள் யாழ். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி உப அதிபர், வட்டுக்கோட்டை தொகுதி ஆசிரியர் சங்கத் தலைவர், வடமாகாண ஆசிரியர் சங்க உப தலைவர், புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் உப தலைவர், பத்திரிகை ஆசிரியர்

வயது - 87

ஆவரங்கால் (பிறந்த இடம்), வடலியடைப்பு, கனடா.

யாழ். ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தசாமி கடந்த 28.03.2021 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிதம்பரம் தம்பதிகளின் ஆசை மகனும், காலஞ் சென்றவர்களான ஆலாலசுந்தரம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிவானந்தம் (பிரித்தானியா), ஸ்ரீஜெயன் (கனடா), சிவஞானராஜா (கனடா), துஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவராணி, ஜயந்தி, சாந்தகௌரி, றமேஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவபாதம், தெட்சணாமூர்த்தி, திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி, இன்பராணி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், நடராசா அவர்களின் பாசமிகு சகலனும், சுமதி, சுரேந்திரன், மாலதி, சிவேந்திரன், பத்மினி, கயல்விழி, முகுந்தன், ஸ்ரீசுதன், சுதர்சன், சுமதி, குருபரன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், ஓவியன், கிருஷ்ணா, பவினா, லக்ஷன், கவினா, பாரியா, திவ்யன், பூவினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் வடலியடைப்பு அரசடி வீதியில் இருக்கும் அவரது இல்லத்தில் நாளை (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**நிகழ்வுகள்**

கிரியை Get Direction

- Sunday, 11 Apr 2021 8:00 AM - 10:30 AM
- Chapel Ridge Funeral Home & Cremation Centre8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தொடர்புகளுக்கு**

| | | | |
|---|---|---|---|
| சிவா | - மகன் | * Phone | : + 4420 8501 2400 |
| ஸ்ரீ | - மகன் | * Mobile | : + 141 6917 4381 |
| ராசன் | - மகன் | * Mobile | : + 141 6820 0258 |
| றமேஸ் | - மருமகன் | * Mobile | : + 164 7609 6421 |
| துஷா | - மகள் | *Mobile | : + 141 6665 6159 |

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 27 - 05 - 1943

உதிர்வு 12 - 03 - 2021

அமரர்

## மேரிலூட்ஸ் அன்ரன் பாலசிங்கம்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 12.04.2021 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஒப்பு கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் கலந்து செபிக்குமாறும் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறும் உற்றார், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

பிரதான வீதி,
இளவாலை


என்றும் நினைவுகளுடன்
அன்ரன் பாலசிங்கம்
(கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ்ப்புத்தாண்டு ராசிபலன்கள்

**தமிழ் ஆண்டுகள் வரிசையில் இந்த ஆண்டு 'பிலவ' வருடமாகத் தொடங்குகிறது. அதன்படி அனைத்து ராசியினதும் பலங்களை பார்ப்போம்.**




பிறர் உதவியை எதிர்பார்க்காமல் தன் சொந்தக் காலில் முன்னுக்குவரத் துடிக்கும் மேட ராசி அன்பர்களுக்கு இந்தத் தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள் எவ்வாறு அமையும் என்று பார்க்கலாம். ராசிக்குள்ளேயே சந்திரன் நிற்கும்போது இந்தப் பிலவப் புத்தாண்டு பிறப்பதால் மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தைரியமான சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.
குடும்பத்தில் அமைதி நிலவும். ஒற்றுமை அதிகரிக்கும். இதுவரை இருந்த குழப்பங்கள் தீரும். அம்மாவுடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் தீரும். குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அந்த வரம் கிடைக்கும். வேலை தேடிக்கொண்டிருக்கும் மேஷ ராசிக்காரர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வீட்டில் சுபகாரியப் பேச்சு நடைபெறும். சித்திரை அல்லது ஆடி மாதங்களில் மகிழ்ச்சியான மனநிலை வாய்க்கும். சொந்த பந்தங்கள் வியக்கும்படி முன்னேற எண்ணுவீர்கள். சகோதர சகோதரிகளின் ஆதரவு பெருகும்.

**பொருளாதாரம் :** வருமானத்தை அதிகரிக்கப் பாடுபடு வீர்கள். அதற்கான பலன்களும் கிடைக்கும். ஆரோக்கி யத்தில் மட்டும் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலமாக இந்தப்புத்தாண்டு அமைகிறது. எதிரிகளின் சூழ்ச்சிகளை வெற்றி கொள்வீர்கள். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வீடு கட்ட வீடு வாங்கப் புதிய கடன்கள் வாங்கும் யோகம் ஏற்படும். கார்த்திகை மாதத்தில் இருந்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். பணவரவு தாராளமாக இருக்கும். செலவுகளை சமாளிப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். மன உளைச்சல் அகலும். தன்னம்பிக்கை துளிர்விடும்.



**அதிர்ஷ்டம் தரப்போகும் அதிசார குரு....**
14.4.2021 முதல் 13.9.2021 வரை மற்றும் 13.11.2021 முதல் வருடம் முடியும் வரை குருபகவானின் சஞ்சாரம் உங்கள் ராசிக்கு 11இல் தொடர்வதால் சாதகமான பலன்கள் ஏற்படலாம். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தைரியமாக முடிவெடுப்பீர்கள். சொந்த வீடுவாங்கும் யோகம் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும்.
அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள் புதிய ஆடை ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்புகளும் தேடிவரும். வழக்குகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.
14.9.2021 முதல் 12.11.2021 வரையிலான கால கட்டத்தில் குரு 10இல் தொடர்வதால் மற்றவர்களின் விவகாரத்தில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. பணிச்சுமையும் அதிகரிக்கும்.

**ராகு கேது அருளும் பலன்கள்**
இப்போது ராகு கேது இருக்கும் இடமும், அடுத்து பெயர்ச்சியாகும் இடமும் சாதகமில்லாததால் வருமானம் அதிகரித்தாலும் செலவுகளும் அதற்கு ஏற்ப இருக்கத்தான் செய்யும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் நிதானத் தையும், பொறுமையையும் கடைப்பிடிக்க வேண்டும். எதிலும் முன்னெச்சரிக்கை தேவை.

**சனிபகவான் தரும் பலன்கள்**
சனிபகவான்10 இல் தொடர்வதால் குடும்பத்தாருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள். குறைநிறைகளை ஆராய்ந்து அனைத்தையும் சீர் செய்வீர்கள். உறவினர்கள் உங்களைப் பற்றி உயர்வாகப் பேசுவார்கள். பழைய சொத்துகளை விற்றுப் புதிய சொத்துகளை வாங்குவீர்கள். சாதிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு...**
அலுவலகத்தில் உங்கள் ஆலோசனைகளுக்கு மதிப்பு ஏற்படும். விரும்பிய இடமாற்றமும் உண்டு. சக ஊழியர்கள் மதிப்பார்கள்.
மரியாதை உயரும். சம்பளப் பிரச்சினை சுமுகமாகத் தீரும். வெளிநாட்டு நிறுவனங்களில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.
கலைத்துறையினரின் படைப்புகள் வெற்றிவாகை சூடும். புது வாய்ப்புகளும் கதவைத் தட்டும். உங்களின் புதிய முயற்சிகள் மக்களால் பாராட்டப்படும். குடும்பத்தில் நிதி நிலை பற்றாக்குறையால் இருந்து வந்த பிரச்சினைகள், குழப்பமான மன நிலை எல்லாம் மாறி உங்களின் செல்வாக்கு, சொல்வாக்கு மதிப்பு உயரும்.

**மொத்தத்தில் இந்தப் பிலவ வருடப் புத்தாண்டு உங்களுக்கு வெற்றிகளைத் தருவதோடு பொறுப்புணர்ந்து நடக்கவும் கற்றுத்தரும்.**

## இன்றைய நாள்



**மேடம்:** குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். மனதுக்கு இனியவர்களின் சந்திப்பு நிகழும். மனக்காயம் ஆறும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைக்கு மகிழத்தக்க செய்தி வந்து சேரும். பணத்தேவை சற்று அதிகரிக்கும். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். பொழுது போக்கு அம்சம் உங்களை திசை திருப்பும்..

**மிதுனம்:** சச்சரவுகளில் சுமுகமான உடன்பாடு ஏற்படும். வீட்டில் கலகலப்பான சூழல் நிலவும். மன நிம்மதி உண்டு. வெளிநாட்டிலுள்ள உறவினிடமிருந்து நற்செய்தி வரும்.

**கடகம்:** வரவேண்டிய செய்தி வரும். அமைதியுடன் இருப்பீர்கள். நேற்றுத் தடைபட்ட நன்மைகள் இன்று நடைபெறும். கவனமாகப் பேசுங்கள். பணியிடத்தில் இணக்கம் தேவை.

**சிம்மம்:** உற்சாகமான நாள். மனச்சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சி வரும். பணியாளர்கள் நிதானமாக முடிவு எடுத்து நிம்மதி பெறுவீர்கள். சிலருக்கு சுபச்செய்தி உண்டு.

**கன்னி:** பிறருடன் தவறாக பேசி வம்பில் மாட்டுவதை தவிர்க்கவும். உங்களுக்கான பொறுப்பை நன்கு உணர்ந்து செயல்படுவீர்கள். உடல் அசதி நீங்கும். ஆன்மிகப் பணிகள் செய்வீர்கள்.

**துலாம்:** நிகழ்ச்சி ஒன்றுக்காக நண்பர்களின் இனிய சந்திப்பு நிகழும். ஊர்விட்டு ஊர் போக வேண்டியிருக்கும். சற்று களைப்பு ஏற்படும். இளைஞர்களுக்கு மகிழ்ச்சி உண்டு.

**விருச்சிகம் :** உடல் அசதியும், மனச்சோர்வும் நீங்கும். சுபச்செய்தி உண்டு. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பயணம் பலன் தரும். நிதானப்போக்குடன் அணுகும் தன்மையால் பயன் பெறுவீர்கள்.

**தனுசு:** பொறுப்புணர்வுடன் செயல்படுவதால் சங்கடத்திலிருந்து தப்புவீர்கள். சுபச்செலவுகள் செய்வீர்கள். மன மாற்றம் உண்டாகும். ஆக்கபூர்வமாக செயல்பட்டு முன்னேறுவீர்கள்.

**மகரம்:** இன்று நல்லதே நடக்கும். தன்னம்பிக்கை கூடும். உடன்பிறந்தோருடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். பெரிய தொடர்பு கிடைக்கும். எண்ணம் நிறைவேறும்..

**கும்பம்:** இளைஞர்கள் குறிக்கோளை நோக்கி முன்னேறுவீர்கள். உற்சாகமான மனநிலை ஏற்படும். புதிய நண்பர்கள் கிடைப்பர். மனதில் நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். நற்செய்தி வரும்.

**மீனம்:** பணியாளர்களுக்குப் பயன்மிக்க அறிவுரைகள் கிடைக்கும். தடைப்பட்ட விடயங்களில் இன்று வெற்றி காண்பீர்கள். உறவினர்கள் வீட்டு விசேடங்களில் கலந்து கொள்வீர்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவண்ணனின் கைது கண்டிக்கப்பட வேண்டியது

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டமை கண்டிக்கப்பட வேண்டியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாநகர காவல் அணி உருவாக்கப்பட்ட விவகாரத்தில் அவசர அவசரமாக மணிவண்ணன் கைது செய்யப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சபையிலே கலந்துரையாடி உறுப்பினர்களின் சம்மதத்துடனும் இதனைச் செய்திருந்தால் பல பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம்.

இருந்தாலும் அரசு இவ்வளவு கடும்போக்காக நடந்துகொள்வதை நாங்கள் நிச்சயமாக கண்டிக்கின்றோம் என்றார். (ம-319)

# மணியின் கைதுக்கு முன்னணியும் கண்டனம்



யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அரசின் பாசிச ஆட்சியை நோக்கிய நகர்வுகள் உச்சத்தை எட்டியுள்ளன. இன மற்றும் அரசியல் ரீதியான பாதுகாப்பின்மை மோசமாகியுள்ளது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தனது ருவிற்றர் பதிவில் பதிவிட்டுள்ளார். (ப-22)

## மணிவண்ணன் கைது; பாசிசத்தின் மறுவடிவம்

### தமிழ் மக்கள் கூட்டணி கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனைக் கைதுசெய்தமை சட்டரீதியாகவோ அல்லது தார்மீகரீதியாகவோ நியாயப்படுத்த முடியாத தொன்று. பணியாளருக்கு வழங்கப்பட்ட சீருடைகளின் நிறங்களை வைத்து அவர் புலிகளை மீளுருவாக்கம் செய்கிறார் எனக் குற்றம் சுமத்துவது கேலிக்குரியது என்பதற்கப்பால் இலங்கை ஆட்சியாளரின் எதேச்சாதிகாரத்தையும் தமிழினத்தின் மீதான அவர்களின் குரூர உணர்வையும் வெளிப்படுத்தி நிற்கிறது என்று தமிழ் மக்கள் கூட்டணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க. அருந்தவபாலன் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது; புலிகள் பயன்படுத்தினார்கள் என்பதற்காக அவ்வாறான நிற உடைகளைப் பயன்படுத்துவோர் பயங்கரவாதத்துக்குத் துணைபோவோர் என முடிவு செய்வது மொட்டைத்தலைக்கும் முழங்கா லுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும். உண்மையில் முதல்வரின் கைது அரச அடக்குமுறையின் வெளிப்பாடு. பாசிசத்தின் மறுவடிவம். நாட்டின் வருங்கால ஆட்சி வடிவத்துக்கான ஓர் எதிர்வு கூறல். முதல்வரின் கைதை நாம் வன்மையாக்க் கண்டிப்பதுடன் உடனடியாக முதல்வரை விடுவிக்க வலியுறுத்துகிறோம் என்றுள்ளது. (ப)

## மணிவண்ணனை விடுவிக்குக

### சிறிதரன் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.10

"பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு யாழ்ப்பாணம் மேயர் கைது செய்யப்பட்டுள்ளமை அபாயகரமான செயலாகும். எனவே, அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய சிறிதரன் எம்.பி.,

"கொழும்பு மாநகரசபையின் சீருடைக்கு ஒத்த சீருடையையே கண்காணிப்பு காவலுக்காகவும், தூய நகரை உருவாக்குவதற்காகவும் அமைக்கப்பட்ட செயற்றிட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும், பயங்கரவாத முலாம் பூசப்பட்டு யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயர் ரி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நாட்டில் ஜனநாயகம் பேணப்பட வேண்டுமானால் இந்த விவகாரம் கரிசனையுடன் கையாளப்படவேண்டும்.

எனவே, மேயர் மணிவண்ணனை விடுதலை செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்." - என்றார். (ந-44)

## தன்னிச்சையான கைதுகளுக்கு உடன் முடிவு கட்டப்படவேண்டும்

### கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 10

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் தமிழ் சமூகத்தினர் மீதான தன்னிச்சையான கைதுகள் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என்று கனேடிய ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:

யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விடுவிக்கப்பட வேண்டும். தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான தொடர்ச்சியான துன்புறுத்தல்கள் மற்றும் தன்னிச்சையான கைதுகள் என்பன முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும், என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

## மணிவண்ணனை சந்திக்க சட்டத்தரணிகளுக்குத் தடை

வவுனியா, ஏப். 10

பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள வி.மணிவண்ணனை சந்திப்பதற்கு சட்டத்தரணிகள் சிலர் முயன்றபோதும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளின் முடிவில் நேற்று அதிகாலை 2 மணியளவில் அவரை பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்து அவரை வவுனியாவில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவு அலுவலகத்துக்கு கொண்டு சென்ற னர். இந்த நிலையில் சட்டத்தரணிகள் அவரைப் பார்வையிடுவதற்கு அனுமதி கோரியபோது அதற்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.இ)

## யாழ். மாநகர முதல்வரை உடன் விடுக்கவேண்டும்

### செல்வம் எம்.பி வலியுறுத்து

மன்னார், ஏப்.10

குற்றத்தடுப்புப் பிரிவால் கைதுசெய்யப்பட்ட யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழர்களின் நிர்வாகத் திறமையைச் சகித்துக் கொள்ள முடியாத சிங்கள அரசு யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணனைக் கைது செய்துள்ளது கைதுசெய்யப்பட்ட மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அதே நேரம் யாழ் மாநகரை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட காவல் படையை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும். இத்தனை வருடங்களாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த அரசால் ஒரு மாநகர சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் செயற்பாட்டை செய்ய முடியவில்லை அதனை ஒரு தமிழன் செய்து விட்டான் என்ற காழ்புணர்ச்சியில் இந்தக் கைது நாடகம் அரங்கேறியுள்ளது. சீருடை காரணமாக யாழ். மாநகர காவல் படையைத் தடைசெய்து முதல்வர் மணிவண்ணனைக் கைது செய்துள்ளது சிறுபிள்ளைத்தனமாக உள்ளது. யாழ் மாநகர காவல் படையினரின் இதே வகையிலான சீருடை கொழும்பு மாநகர சபையிலும் உள்ளமை என்று மணிவண்ணன் விளக்கம் அளித்துள்ளார் அவ்வாறு விளக்கமளித்தும் மணிவண்ணனை கைது செய்திருப்பது இந்த அரசு தமிழர்கள் எந்த வகையிலும் முன்னேறி விடக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பதைக் காட்டுகிறது. சாதாரண சீருடையைப் பார்த்து அரசு அச்சம் கொள்வது எதற்காக என்று எமக்குத் தெரியவில்லை. எனவே கைது செய்யப்பட்ட யாழ் மாநகர முதல்வரை உடனடியாக விடுதலை செய்வதோடு மாநகர காவல் படையை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றார். (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கைதுக்கு சீருடையே காரணம் பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஏப். 10
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளைத் தூய்மையாகப் பேணுவதற்காகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களின் சீருடை தொடர்பான குற்றச்சாட்டின் பேரிலேயே யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சீருடை தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறையினரின் சீருடையை ஒத்தது எனத் தெரிய வந்துள்ளது.
இது தமிழீழ விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கம் செய்யும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.
குறித்த ஊழியர்கள், யாழ். மாநகர மேயரால் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சீருடையும் மேயரின் பணிப்புரையின் பேரில் வழங்கப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
இதற்கமைய, யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
பின்னர் அவர் மேலதிக விசார ணைக்காக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
தற்போது அவர் வவுனியாவிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசா ரிக்கப்பட்டு வருகின்றார்- என்றார். (ஒ.5,22)

காவு வாங்கியது கொரோனா

## கணவனைத் தொடர்ந்து மனைவியும் உயிரிழப்பு

### வவுனியாவில் சோகம்

வவுனியா, ஏப். 10
வவுனியாவில் கடந்தவாரம் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முதியவரின் மனைவிக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்று அவரும் உயிரிழந்துள்ளார்.
வவுனியா வடக்கு அனந்தர்புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சில நாள்களுக்கு முன்பாக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு பி.சிஆர் பரிசோதனை முன்னெ டுக்கப்பட்டது. அந்தப் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக வெலிக்கந்த மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இதேவேளை அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் சிலர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். முதியவரின் மனைவிக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர் கொழும்பு ஹோமாகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந் நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார். (ப-110)

## அஜித்குமார மான்னப்பெரும எம்.பி.யாகப் பதவியேற்பு

கொழும்பு, ஏப். 10
கம்பஹா தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக அஜித்குமார மான்னப்பெரும சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் உறுப்புரிமை இரத்தானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு மான்னப்பெருமவை நியமிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது. நாடாளுமன்ற உறுப்பினராக அவரது பெயர் குறிப்பிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கம்பஹா நகர சபையின் தலைவராக கடமையாற்றிய அவர் 2009ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு வரை மேல் மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்தினார்.
2015ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அவர் தெரிவானார்.
2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற த்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஊடாக கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் 5 வது இடத்தைப் பெற்றார்.
கம்பஹா புனித சிலுவை கல்லூரி, பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்ற அவர் மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பட்டத்தை பெற்றுள்ளார். (ஒ.44)

## சட்டவைத்திய அதிகாரியிடம் மணிவண்ணன் முன்னிலை!!

வவுனியா, ஏப்.10
யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் சட்டவைத்திய பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். யாழ்ப்பாணம் மாநகர சபையால் உருவாக்கப்பட்ட காவல் படை தொடர்பில் மாநகரசபை முதல்வரும், சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டு. வவுனியாவில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.
இந்நிலையில் நேற்று மதியம் ஒரு மணியளவில் சட்ட வைத்திய பரிசோதனைக்காக, வவுனியா பொது மருத்துவமனைக்கு அவர் அழைத்துச்செல்லப்பட்டார்.
பரிசோதனைகளின் பின்னர் கண்டி வீதியில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு மீண்டும் அழைத்துச்செல்லப்பட்டார். (ந-110)







## ஒரு கத்தோலிக்கருக்கு ஒரு மரம்

### பங்களாதேஷ் திருஅவை அறிவிப்பு

திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய இறைவா உமக்கே புகழ் என்ற திருமடலுக்கு பதிலிறுக்கும் வகையில் பங்களாதேஷ் நாட்டில் வாழும் கத்தோலிக்கர்கள் சார்பில் ஒருவருக்கு ஒரு மரம் என்ற கணக்கில் படைப்பவர் படைப்பு மனித இனம் ஆகிய மூன்றுக்கும் உள்ள தொடர்பினை உணர்த்தும் வண்ணம் 4 லட்சம் மரங்கள் நடப்படும் என டாக்கா உயர்மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் கர்தினால் பற்;றிக் டி றொசாரியோ தெரிவித்துள்ளார்.
பங்களாதேஷ் நாட்டை உருவாக்கிய முஜிபுர் ரகுமானின் பிறப்பின் நூற்றாண்டு மற்றும் 1971ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி பாகிஸ்தானிடமிருந்து பங்களாதேஸ் நாடு விடுதலையடைந்ததன் 50ஆம் ஆண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், நிகழ்வுகளை மேலும் சிறப்பிக்கும் வகையிலும் இந்த மரநடுகை அமையவுள்ளது. இது தொடர்பில் பங்களாதேஷ் திருச்சபை மேலும் தெரிவித்ததாவது: பங்களாதேஷ் நாட்டில் உள்ள 8 மறைமாவட்டங்களுக்கும் உரிய வளாகங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றில் மரங்களை நடும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து கத்தோலிக்கர்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் வெளிப்பாடாக இன்னும் பிற இடங்களில் மரங்களை நடலாம். நீடித்த பயனளிக்கும் தேக்கு மரங்களை மக்கள் நடவேண்டும். மழையை வருவிக்கும் மரங்கள் மண் அரிப்பை தடுக்கவும் வழிவகுக்கின்றன. சுற்றுச்சூழலின் சீரழிவைத் தடுக்க திருத்தந்தை பிரான்சிஸ் தன் திருமடல் வழியே விடுத்துள்ள அழைப்பை அனைவரும் ஏற்கும் முக்கிய காலக்கட்டத்தில் இருக்கிறோம் - என்றுள்ளது.

**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்**
ஊடக வருகை விரிவுரையாளர்
இங்கை திறந்த பல்கலைக்கழகம்

## நம்பிக்கையை இழக்காதீர்கள்

### பாப்பரசர் பிரான்சிஸ் அழைப்பு



கொரோனா பெருந்தொற்று உருவாக்கியுள்ள இருள் நிறைந்த இந்தக் காலக்கட்டத்தில் நம்பிக்கையை இழக்காதீர்கள் என்று பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.
உயிர்ப்புப் பெருவிழா, பெருந்தொற்று ஆகிய இரு தலைப்புக்களில் தன் ருவீற்றர் செய்திகளை வெளியிட்டுள்ள திருத்தந்தை, பெருந்தொற்றின் இந்த இருளான மாதங்களில் வாழ்வை மீண்டும் தொடங்கவும் ஒருபோதும் நம்பிக்கையை இழக்கமாலிருக்கவும் உயிர்த்த ஆண்டவர் எமக்கு விடுக்கும் அழைப்புக்குச் செவிமடுப்போம் என்ற சொற்களைப் பதிவு செய்துள்ளார். இயேசுவின் உயிர்ப்பு தெளிவற்ற ஓர் அடையாளமோ அல்லது உளவியல் முறைப்படி ஆறுதல் தருவதோ அல்லது ஒரு கடந்தகால நிகழ்வோ அல்ல, மாறாக மிகவும் நம்பிக்கையிழந்த சூழல்களிலும்கூட கடவுள் நம் நம்பிக்கையாக இருக்கிறார். அவர் நம் வாழ்வின் வேதனைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர் அல்லர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### சிறிபவானி சகாயநாயகம்

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிபவானி சகாயநாயகம் 08.04.2021 அன்று வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் சின்னப்பு மரியசீலி ஆகியோரின் மகளும், காலஞ்சென்றவர்களான சில்வெஸ்டர், அனி ஆகியோரின் மருமகளும், ஜோசப் சகாயநாயகம் (ஓய்வுபெற்ற வலய இணைப்பாளர் CARE) அவர்களின் அன்பு மனைவியும், அனுபவிரியேல் (S.V.M PVT LTD) பிந்துமைக்கல் (வடமாகாண முகாமையாளர், மல்றிலக்), அபறிணா, பியூறிணா (கணக்காளர், LNR Construction Pvt LTD) சுபறிணா, றுபிணா (தமு)(சிறுவர் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் வரோட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிறிஷ்ணி, தர்ஷிணி (நிர்வாக முகாமையாளர்), றொகான் துஷ்யந்தன் (L.H.R.C) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சிறிதரன், சிறிகைலாயினி (ஆசிரியர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சிறிறஜனி, சிறிசுதர்சினி (பிரான்ஸ்), சிறிசுதாகரன் (ஆசிரியர், புனித சாள்ஸ் ம.வி), சிறிமைதிலி (OMMI) ஆசிரியர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சகாயராணி (ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்), சகாயமலர், சகாயராஜா (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), ஜோய் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜோசப் அன்டனி, கனிமொழி (ஆசிரியர், யா/மண்கும்பான் G.T.M.S) ஆகியோரின் மைத்துனியும், சிபோறா, கம்சிகா, ஆருஷி, டியோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல. 100, பழைய பூங்கா வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பின்னர் யாழ். மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 889 7997
074 007 0033


# போதைக்கு எதிரான வாரம் கரைச்சியில் கடைப்பிடிப்பு



கிளிநொச்சி,ஏப்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப் பொருளைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்த வாரத்தை போதைக்கு எதிரான வாரமாக கடைப்பிடிக்குமாறு கரைச்சி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுக் காலை சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது போதைக்கு எதிரான பிரேரணையை கொண்டுவந்து சபையில் உரையாற்றிய தவிசாளர்,

கிளிநொச்சியில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் கொலைகளுக்கும், தற்கொலைகளுக்கும் முதன்மைக் காரணமாக இருப்பது போதைப்பொருள் பாவனையே.

எனவே இது தொடர்பில் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கான செயலணி ஒன்று உருவாக்கப்பட்டு, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான வர்களை அவற்றில் இருந்து மீட்கும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். இந்தச் செயலணிக்கு ஒரு தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்து கொள்ள வேண்டும்.

இதன்மூலம் மக்கள் சட்டவிரோதமான போதைப்பொருள் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்க முடியும். எனத் தெரிவித்தார். குறித்த பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஐ-6)


## மரண அறிவித்தல்



### பரநிருபசிங்கம் வரதலட்சுமி

நயினாதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கோபால் ஒழுங்கை, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் வரதலட்சுமி அவர்கள் நேற்று (09.04.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா தையலம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தகுமார் (ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், இந்து கலாசார அமைச்சு), ரவீந்திரா (ஜேர்மனி), சுவர்ணன் (லண்டன்), தவநிதி, சுரேஸ்குமார் (அதிபர், யா/காங்கேசன்துறை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும், பேரின்பராணி, சசிமாலா (ஜேர்மனி), வைதேகி (லண்டன்), மால்மருகன் (யாழ் பல்கலைக்கழகம்) ரதிதேவி (ஆசிரியர், யா/மூளாய் அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மாசிலாமணி மற்றும் ஜெயலட்சுமி, இராசலட்சுமி, வேதநாயகி, மருதயினார், புனிதவதி, மகாலிங்கம், திலகேஸ்வரி ஆகியோரின் அருமை சகோதரியும், காலஞ்சென்ற காமாட்சி மற்றும் ஆ.சி.பழனிவேல், மகாதேவா, காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் இரத்தினேஸ்வரி, சுரேந்திரநாதன், நேசமலர், சிவனேசன் ஆகியோரின் அருமை மைத்துனியும், ரஜீவன், கஜாந்தினி, உதயாரணி, காயத்திரி, அஸ்வினி, ராகுல், ராகவி, ராகல்யா, ராதாஞ்சலி, ஹரிஷாஞ்சலி, ஜனோஷன், ஷாம்பவி, சேயோன், சஞ்சேயன் ஆகியோரின் அருமை பேர்த்தியும், அபிரன், ஆதிரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

29, கோபாலு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 8543


மூடப்பட்ட வர்த்தக நிலையங்கள்

# தோற்றாளரைத் தவிர்த்து ஏனையோருடன் இயங்கலாம்

இரண்டு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு, அதில் கொரோனோத் தொற்று இல்லாத யாழ். நகர வர்த்தகர்கள், சுகாதாரப் பிரிவினரிடம் அதை உறுதிப்படுத்தினால் கடைகளைத் திறக்க அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் நகரப்பகுதியில் கொரோனாத் தொற்று அதிகரித்ததன் காரணமாக பூட்டப்பட்ட வர்த்தக நிலையங்களில் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது .

ஆனால் சில வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் கொரோனாத் தொற்று உள்ள வர்த்தக நிலையங்களாக அடையாளப்படுத்தப்பட்டு துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறான வர்த்தக நிலையங்கள் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரையோ அல்லது ஊழியரையோ தவிர்த்து, ஏனையவர்களுக்கு இரண்டு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டுகொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டவர்கள் அவ்விவரங்களை சுகாதார மருத்துவ அதிகாரியிடம் வழங்கினால், அவர்கள் வர்த்தக நிலையங்களைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஐ)


## துயர் பகிர்கின்றோம்



சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதியுறை ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான ஆலய பிரதமகுரு
**சிவஸ்ரீ இலக்ஷ்மீகாந்த ஜெகதீச குருக்கள்**
அவர்களின் அன்புத் தாயார்
**இலக்ஷ்மீகாந்த ஐயர் காயத்ரிதேவி அம்மா**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினரும்
ஆலய அடியவர்களும்
ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சண்முகம் அன்னசோதி



பிறப்பு 15.02.1935 இறப்பு 08.04.2021

புங்குடுதீவு இறுப்பிட்டி 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ச.அன்ன சோதி அவர்கள் கடந்த (08.04.2021) வியாழக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணி யளவில் இடம்பெற்று, கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் தகனக்கிரியை நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

97, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 08 . 1958

மறைவு 05 . 04 . 2021

## திருமதி மாலினி ஸ்ரீகரன்

(முன்னாள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மாலினி ஸ்ரீகரன் 05.04.2021 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் (இளைப்பாறிய தபாலதிபர்) வரதாம்பிகை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி தங்கேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், மதுசனின் தாயாரும், சரவணபவன், ராகினி, தயாபரன், பிரதீபன், புனிதன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2021) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

### தகவல்:

ஸ்ரீகரன் மதுசன்
கனடா.
001 905 216 8881

குமாரசாமி குகானந்தன்
இணுவில்.
077 360 5282

# கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் திருமதி பிரபாலினி தனம் அவர்களின் பாசமிகு தாயார்



திருமதி
## விஸ்திரலிங்கம் புஸ்பராணி

அவர்கள் 09.04.2021 வெள்ளிக்கிழமை காலமாகி யுள்ளார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன் னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

பெறுகை அறிவித்தல் வெளிவாரி அடிப்படையிலான சாரதி சேவை, பாதுகாப்புச்சேவை, வழங்கலுக்கான

### விலைமனுக் கோரல் 2021/2022

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் 2021ம் ஆண்டுக்கான சாரதி சேவை, பாதுகாப்புச் சேவை, வழங்குவதற்கு தகை மையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திர- ங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(16)/1/PC/2021 | பாதுகாப்புச் சேவை | 03 |
| NP/14/41(16)/1/PC/2021 | சாரதி | 02 |

1) சேவை வழங்குநர்கள் சாரதி சேவை, பாதுகாப்புச் சேவை, வழங்கலுக்கான வியாபா ரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

3) சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாயில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 10.04.2021 ஆம் திகதி தொடக்கம் 23.04.2021 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4) பெறுகை ஆவணங்கள் 23.04.2021ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப் படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப் பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

5) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப் பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

அ.ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.


# வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் தனியார் பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்திற்கு

➤ மனேஜர் ➤ விற்பனைப்பிரதிநிதி
➤ சிட்டை எழுதுனர் (இருபாலாரும்)
உடன் தேவை

தொடர்பு (ஆர்வம் உள்ளவர்கள் மட்டும்)
076 009 4946


# பொதுக்கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 02.05.2021 ஞாயிற்றுக்கிழமை 10.00 மணிக்கு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுக்கூட்டத்திற்கான பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 16.04.2021 முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

செயலாளர்,
தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ.து)
021 224 3722


# பதவி வெற்றிடம்


தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ண்பம் கோரப்பட்டுள்ளன.

1. வரவேற்பாளர் - (பெண்) - A/L
2. எழுதுவினைஞர் - (பெண்) - A/L
3. சுகாதாரப் பணியாளர் - (பெண்)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிபரக்கோவையுடன் அலுவலக நேரத்தில் வைத்தியசாலை அலுவலகத்திற்கு வருகை தரவும்.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை (வ.து)
077 436 2892 (தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக)


# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 02 . 08 . 1935

இறப்பு 06 . 04 . 2021

## திரு.பொன்னுத்துரை சண்முகராஜா

(கொக்குவில், கனடா)
(முன்னாள் போசகர், கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்)

வளர்மதி ஆர்வலர் திருமதி S.தவமணி அவர்களின் அன்புக் கணவரும், வளர்மதி முன்னேற்றக் கழக உறுப்பினர்களான சித்திராங்கன், சுமித்திரா, சுபத்திரா, விஜித்திரா, ஸ்ரீரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆகிய பொன்னுத்துரை சண்முகராசா அவர்கள் கனடாவில் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து துயருறுகின்றோம்.

அமரரது குடும்பம் முழுவதும் வளர்மதியின் வளர்ச்சியில் பல வித உதவிகளையும் வழங்கி உறவினைப் பேணிய அன்னா ரின் இழப்பு உறவின் இழப்பாக கருதி எமது அஞ்சலியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வளர்மதி நிறைவாழ்வகம்

சம்பியன் லேன்
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 02 . 1941

இறப்பு 09 . 04 . 2021

## ராமலிங்கம் வடிவழகி

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட ராமலிங்கம் வடிவழகி நேற்று (09.04.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா பாக்கியத்தின் அன்பு மகளும், மாசானம்பிள்ளை முத்தாச்சியின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.04.2021 முதல் கோப்பாய் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (11.04.2021) இறுதிக்கிரியைகள் நடைபெற்று 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். அன்னாரின் பிரிவால் துயருறும் மகன்மார், மகள்மார், மருமகன்மார், மருமகள்மார், பேரன்மார், பேர்த்திமார், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்: மகன்மார்
சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்)
செல்வரட்ணம் (ஜேர்மன்)
செல்வராஜா (கனடா)

## ஆதன உரிமை தொடர்பாக

இவ் ஆதனம் பருத்தித்துறை வீதி. அல்வாய் கிழக்கு. அத்தாய் என்னும் முகவரியில் பின்வரும் ஆதன அட்டவணையினை உடைய ஆதனமாகும்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பகுதி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட கட்டை வேலிக் கோயிற்பற்று அல்வாய் மாப்பான குறிச்சியிறை "கலப்பிலா வத்தை நி.பர 24 மேற்படி தோட்டம் 4(பதிவு பரு V 637/139) இதில் றோட்டுக்கு தெற்குப் புறமாக 1/8 பங்குக்கு சேரவேண்டிய நிலத்துக்கு ஆட்சிப்படி நி.பர 3, ½ . இதற்கு எல்லை கிழக்கு மயில்வாகனம் சரவணபவானுக்கும் மறு பேருக்குமுடைய ஆதனம். வடக்கு றோட்டு மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடாங்கலும்

இவ் ஆதனத்தில் திரு. திருமதி சிறீகரன் சுதாகரனும் பெண் பொன் மொழியும் கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு விண்ணப் பித்துள்ளார்கள் எனவே இவ் ஆதனத்தின் உரிமை தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தரு மாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லை எனின் குறித்த ஆதனத்தில் திரு. திருமதி சிறீகரன். சுதாகரன் பெண் பொன்மொழியும் கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற் கொள்ளும் என்பதினை அறியத்தருகின்றேன். மேலும் இவ் கட்டட அனுமதி தொடர்பாக ஏற்படக்கூடிய ஆதன உரிமை தொடர் பான எவ் விளைவுகளுக்கும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

**தங்கவேலாயுதம் ஜங்கரன்**
**தவிசாளர்**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை.**

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**மனித நேயம் மண்ணில் மரணிப்பதில்லை**



## Lion. மார்கண்டு கிரிதரன்

**(விமாகி)**

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்
ஆண்டுகள் எட்டு எட்டினும் ஆறிடுமோ எம்துயரம்
இதயம் இத்துயர் சுமந்து கனமாய் கனக்கிறதே
எனினும் காலங்கள் கடுகதியாய் கடந்தோடிவிட்டன
நிழலாக நீங்கள் இருந்து நிஜமாக எம்மை வழிநடாத்துகிறீர்கள்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம்முள்ளே நீங்கள் எந்நாளும் உயிர்வாழ்கிறீர்கள்
இனிய நினைவுகளும் இழந்தவலியும்
இறுதி மூச்சுவரை எம்முள் சுமப்போம்!

**நீங்கா நினைவலைகளுடன்**
அன்பு மனைவி : றோகினி - கிரிதரன்
அருமை மகள் : கிரிதரன் - அம்ரிஷா

## தேவை

இருபாலை சந்தியில் உள்ள புடைவை கடைக்கு பெண் ஊழியர்கள் தேவை

**தொடர்பு 076 049 6031**

## இன்றுமுதல் மலிவு விற்பனை

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை.

**230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**
**076 8219 416, 076 8219 418**

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

48 நாட்கள் நிரம்பிய பொம்மேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கி, தடுப்பு ஊசி போடப்பட்டது.

**தொடர்பு 077 869 5005**

## பெயர் மாற்றம்

மீசாலை வடக்கு மீசாலையில் வசிக்கும் **சண்முககரன் சண்ஷனா** ஆகிய நான் எனது பெயரை **சண்முககரன் சயன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சண்முககரன் சயன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**சண்முககரன் சயன்**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வீடு வாடகைக்கு மற்றும் விற்பனைக்கு உண்டு.

* 4 அறைகள்
* 2 இணைந்த குளியல் அறைகள்
* 1 சாதாரண குளியல் அறை
* 1 சமையல் அறை
* Hall with Varanta

பயன் தரும் மரங்கள் சுற்று மதில் Office ஆகவும் வீடாகவும் பயன்படுத்த முடியும்.
**மாத வாடகை : 36 000 ரூபா**
**விற்பனை விலை 3 00 00 000** (3 Crore)
மேலதிக விபரங்களுக்கு

**074 027 2778**

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (ம-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் உள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**01. பதவி** :- **விற்பனை உதவியாளர் (வெற்றிடம்** 02) - 308/17
**சம்பளத்திட்டம்** :- 14725 - 115X10 - 130X10 - 17175
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகள்)
**தகைமைகள் :** (அ) கூட்டுறவுப்பணியாளர் கனிஸ்டதரச்சான்றிதழ்
**அல்லது**
(ஆ) 08ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**02 பதவி** :- **தொழிலாளி (வெற்றிடம்** 05) - 318/17
**சம்பளத்திட்டம்** :- 14725 - 115X10 - 130X10 - 17175
**தகைமைகள் :** - (அ) 05ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கிய மும் இருத்தல் வேண்டும்.

- சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். அலுவலக நேரத்தில் ரூபா 10 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்
- மேலுள்ள இரண்டு பதவிகளுக்குமான வயதெல்லை 18 - 45
- சங்கம் கோரும் பிணையை ரொக்கமாக செலுத்த வேண்டும்.
- கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிவோர் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல
- சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ் அனுபவச் சான்றிதழ். பிறப்புச்சான்றிதழ்களின் நிழற்பிரதி இணைத்தனுப்புதல் வேண்டும்.
- கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் **பொது முகாமையாளர் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, அச்சுவேலி** என்ற முகவரிக்கு 30.04.2021 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக் கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
- பூரணப்படுத்தப்படாததும் தகுதியற்றுள்ளதுமான விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.

**கி.வரதராசன்**
**பொதுமுகாமையாளர்**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**அச்சுவேலி.**
10/04/2021

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

*திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்*

# இந்தியன் செலக்ஷனின்

# புத்தாண்டு மலிவு விற்பனை

**அசாதாரண சூழ்நிலையால் தற்காலிகமாக நடைபெறாமலிருந்தது. எனவே வாடிக்கையாளர்களின் நலன்கருதி மீண்டும் 09.04.2021 முதல் 20.04.2021 வரை அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும், சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவும்**

**இந்தியன் செலக்ஷனின்**
**புத்தாண்டு மலிவு விற்பனை**

**நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்து கொள்கின்றோம்.**



**கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.**

**அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும்.**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 09.04.2021 - 20.04.2021 வரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவிலும்...

புதிய அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழுவிடம் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யோசனைகளை அந்தக் கட்சியின் சார்பில் விக்னேஸ்வரன் சமர்ப்பித்தார். அதில் ஒற்றையாட்சியால்தான் நாடு பேரழிவைச் சந்தித்தது என்றும், புதிய அரசமைப்பில் சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது சமஷ்டி அல்லது கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இந்த ஆட்சியில் இடமில்லை. இந்த முறைமைகள் புதிய அரசமைப்பில் இருக்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் அணியினர் கனவு காணக்கூடாது. நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சி முறைமை மூலம்தான் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். புதிய அரசமைப்பில் இது தொடர்பில் தெளிவாகப் குறிப்பிடப்படும்.

ஒற்றையாட்சி முறைமையால் இந்த நாடு பேரழிவுகளைச் சந்திக்கவில்லை. பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்டை மீட்டெடுத்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழக் கனவைத் தவிடுபொடியாக்கினோம். அவர்களை இல்லாதொழித்தோம்.

சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமைதான் பிரிவினைக்கு வழி வகுக்கும். அது நாட்டைப் பிளவுபடுத்தும், நாட்டின் நல்லிணக்கத்துக்குப் பாதகமாக அமையும் - என்றார். (ஒ-22)

## திருநெல்வேலி...

சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த மாத இறுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து திருநெல்வேலி பொதுச்சந்தைக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டு, உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கடந்த 14 நாள்களாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவர்களுக்கு இரு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தொற்று இனங்காணப்பட்டவர்களின் வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

அதேவேளை, பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளாத வர்த்தகர்கள், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-26,9)

## யாழ்ப்பாணத்தில்...

துவ பீட ஆய்வுகூடம் ஆகியவற்றில் நேற்று 760 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 26 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 24 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 22 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள். கிளிநொச்சி கண்டாவளையிலும், முல்லைத்தீவிலும் தலா ஒவ்வொருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே சுயதனிமை ப்படுத்தப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## கடலில்...

உடல் நலக்குறை ஏற்பட்டதை அடுத்து அம்பன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். சடலம் மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## பொலிஸ் அதிகாரம்...

யிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸின் செயலையும் மாநகர சபையா செய்கின்றது, நாட்டில் சட்டம் எங்கே என்று தொலைக்காட்சியொன்று கேள்வி எழுப்பியது. உங்கள் கட்சி (கூட்டமைப்பு) உறுப்பினர் ஒருவரே தொலைக்காட்சியில் கேட்டிருந்தார். சட்டம் தற்போது செயற்படுகின்றது. புலிகளின் காலத்தில் வடக்கில் நீதிமன்றம் மற்றும் பொலிஸ் எவ்வாறு செயற்பட்டது என்பது எமக்குத் தெரியும். எனவே, பொலிஸின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு எந்தவொரு மேயருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார். (ஒ-44)

## புலிகளை ...

பட்டுள்ளார்.

இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர மேயர் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்று எந்த அடிப்படையில் சொல்கின்றீர்கள்?

பதில்: தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல் துறை பயன்படுத்திய சீருடையை ஒத்த சீருடையைத்தான் யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் மணிவண்ணன் காவல்துறை உறுப்பினர்களுக்கு பயன்படுத்தியுள்ளார்.

கேள்வி: இதே சீருடையைத்தானே கொழும்பு மாநகர சபையும் பயன்படுத்தியுள்ளதே?

பதில்: கொழும்பு மாநகர சபையின் சீருடைக்கும் இதற்கும் வித்தியாசங்கள் உள்ளன. கொழும்பு மாநகர சபை மேற்படி திட்டத்தை சபையின் முழுமையான அனுமதியுடன் செயற்படுத்துகின்றது. ஆனால் யாழ்ப்பாணம் மாநகர சபையில், மேயர் மணிவண்ணனின் தனிப்பட்ட விருப்பில்தான் இந்தப் படை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சீருடையும் அவரின் விருப்புக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. இது எமது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அத்துடன் மாநகர காவல் படைக்கோ அவர்களது சீருடைக்கோ மாநகர சபையின் அனுமதியை மணிவண்ணன் பெற்றுக் கொள்ளவில்லை. மாநகரசபையின் அதிகாரங்களை அவர் துஷ்பிரயோகம் செய்துள்ளார். மேலும் காவல் படை பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட ஆரம்பித்துள்ளது. சமூக ஊடகங்களில் மாநகரசபையின் சீருடையையும் புலிகளின் காவல்துறையின் சீருடையையும் ஒப்பிட்டு படங்கள் பகிரப்பட்டுள்ளன. அதைத் தமிழ்த் தரப்பினரே சுட்டிக்காட்டியுள்ளனர் - என்றார். (ஒ-5,22)

## மணிவண்ணனுக்கு ...

கொண்டிருந்தனர். அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சீருடை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையின் சீருடையை ஒத்ததாக இருந்தது என்று கூறி யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார், அந்தச் சீருடைகளையும் தம்வசம் எடுத்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரிடமும் நேற்று அதிகாலை 2 மணிவரை பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர். அதன் பின்னர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வி.மணிவண்ணன் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவரிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்பின்னர் நேற்று மதியம் ஒரு மணியளவில் சட்ட மருத்துவ பரிசோதனைக்காக அவர் வவுனியா பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதன்பின்னர் மீண்டும் கண்டி வீதியில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவரைச் சந்திப்பதற்கு சட்டத்தரணிகள் குழாம் முயன்றபோதும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. வி.மணிவண்ணனின் சகோதரரான, சட்டத்தரணி வி.திருக்குமரனுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

நேற்று இரவு 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றுக்குப் பலத்த பாதுகாப்புடன், கைவிலங்கிடப்பட்ட நிலையில் வி.மணிவண்ணன் கொண்டுவரப்பட்டார். இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்திருந்த பொலிஸார், குற்றச் செயல்களைத் தூண்டினார் என்று தெரிவித்து, அவரை விளக்க மறியலில் வைக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரினர். யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர்கள் ஐவருக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல் துறையின் சீருடையைப் போன்ற சீருடை வழங்கப்பட்டுள்ளது என்றும், அவர்கள் பொலிஸார் ஈடுபட வேண்டிய வீதிப் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் நீதிவானுக்கு அறிக்கையிட்டிருந்தனர்.

வி.மணிவண்ணன் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வீதிகள் தொடர்பான விசேட அதிகாரங்கள் மாநகர சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மாநகர சபையுடைய கடமைகளைச் செய்வதற்கு ஊழியர்களை நியமிக்கும் அதிகாரமும் மாநகர சபைக்கு உண்டு. மாநகர சபை இரு வாரங்களுக்கு முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்தை பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற அடிப்படையில் மேயர் செயற்படுத்தியிருந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடையை ஒத்தது என்று கூறப்படும் விடயத்தில் கொழும்பு மாநக சபையில் வாகனங்கள் தரிக்குமிடத்தில் பணம் அறவிடுவதற்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ளவர்களும் இவ்வாறான சீருடையையே பயன்படுத்துகின்றனர் என்று சட்டத்தரணிகள் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

வாதப் பிரதிவாதங்களை அடுத்து நீதிமன்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வரை 2 லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தது. வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (எ-26,110)

## சீனாவின் ...

ளுக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர், செயலர் ஆகியோர் இந்த மனுவை மூத்த சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஊடாக நேற்றுத் தாக்கல் செய்துள்ளனர்.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, மருந்து உற்பத்தி பகிர்ந்தளித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன்ன தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சபை உள்ளிட்ட 24 தரப்புக்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளன.

சைனோஃபோர்ம் தடுப்பூசியின் பாதுகாப்புச் செயற்திறன் மற்றும் தரம் தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரி சபை ஊடாக முறையான அனுமதி வழங்கப்படும் வரை அந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இந்தத் தடுப்பூசி நாட்டுக்குள் கொண்டு வரப்பட முன்னர், அது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் உள்ளடங்கியுள்ள உறுப்பினர்களை தன்னிச்சையாக நீக்கும் செயற்பாடு பொதுமக்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அது அரசமைப்பை மீறும் செயல் என்றும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை, சைனோபோர்ம் தடுப்பூசி தொடர்பில் ஆராய்வதற்கு நியமித்த நிபுணர் குழுவின் விவரங்களையும் அவர்கள் அந்தத் தடுப்பூசி தொடர்பில் கோரிய விவரங்களையும் வெளிப்படுத்த பிரதிவாதிகளுக்கு உத்தரவிடவேண்டும் என்றும் மனுதாரர்கள் கோரியுள்ளனர். (ஒ-5)

## தனிமையில்...

லைச் சேர்ந்த சி.இராமேஸ்வரன் (வயது-40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன்-ரஷ்யா முறுகல்

# அமெ. கப்பல்கள் விரைவு!

**மொஸ்கோ, ஏப்ரல் 10**

**ரஷ்யா - உக்ரைன் இடையிலான மோதல் மீண்டும் தீவிரம் பெற்றுள்ள நிலையில், குறித்த பகுதிக்கு தனது போர்க் கப்பல்களை அனுப்ப முடிவெடுத்துள்ளது அமெரிக்கா.**



அயல் நாடுகளான ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல்போக்கு இருக்கின்றது. உக்ரைன் நாட்டின் கிழக்கு எல்லை பகுதியான டான்பாஸ் மாகாணத்தை கைப்பற்ற ரஷ்யா முயற்சி செய்கின்றது என்று உக்ரைன் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றது. அண்மையில் இந்த எல்லையில் ரஷ்யா போர்ப் பயிற்சி நடத்தியது.

இதையடுத்து ரஷ்யா இராணுவ ரீதியாக அணுகத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்து அதிகளவான படைகளை தனது எல்லையில் உக்ரைன் குவித்தது. ரஷ்யாவும் பதிலுக்கு தனது படைகளைக் குவித்தது. இதனால் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

உக்ரைன் அமெரிக்காவின் நெருங்கிய நட்புநாடு. எனவே உக்ரைனைப் பாதுகாக்கும் வகையில் குறித்த பகுதிக்கு தனது போர்க் கப்பல்களை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அடுத்த ஓரிரு தினங்களில் கருங்கடலில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் முகாமிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ரஷ்யக் கடற்படையின் நடவடிக்கைகள் மற்றும் கிரிமியாவில் துருப்புக்களின் நகர்வுகளை கண்காணிப்பதற்காக, அமெரிக்க கடற்படை கருங்கடல் பகுதியில் உள்ள சர்வதேச வான்வெளியில் உளவு கண்காணிப்பு விமானங்களை தொடர்ந்து இயக்கியும் வருகின்றது. (ம)

## தாக்கியது இஸ்ரேல்!

### சிரியா குற்றச்சாட்டு

டமஸ்கஸ், ஏப். 10

இஸ்ரேல் இராணுவம் அத்துமீறி உள்நுழைந்து தாக்குதல் நடத்தியது என்று சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுகுறித்து சிரிய அரசு ஊடகம் தரப்பில், 'சிரியாவின் தலை நகர் டமஸ்கஸ் அருகே தென் பகுதியில் இஸ்ரேல் ராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இதில் பலர் காயமடைந்தனர்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் உள்ள ராணுவ தளங்களை மையமாக வைத்து இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியுள்ளது என்று பிரிட்டனை மையமாக கொண்டு செயல்படும் போர் கண்காணிப்புக் குழுவும் தெரிவித்துள்ளது. (ம)



## மூடப்பட்டது அங்கோர்வாட்

நாம்பென், ஏப். 10

கம்போடியாவில் கொரோனாப் பெருந்தொற்று அதிகரித்துள்ள நிலையில், அங்குள்ள புகழ்பெற்ற இந்துத் தேவாலயமான அங்கோர்வாட் ஆலயம் மூடப்பட்டுள்ளது.

கம்போடியாவில் இதுவரை 3 ஆயிரத்து 28 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இன்னும் பாதிப்பு அங்கு அதிகரித்து வரும் நிலையிலேயே அந்த இந்துக் கோவில் மூடப்பட்டுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி வரை இந்தக் கோவில் மூடப்பட்டிருக்கும் என்றும் கம்போடிய அரசு அறிவித்துள்ளது. (ம)

## ஈரான்-அமெரிக்கா திரைமறைவில் பேச்சு

ஈரான் அமெரிக்கா இடையில் திரைமறைவில் முன்னெடுக்கப்படும் பேச்சுக்கள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கடந்த சில ஆண்டுகளாக கடும் எதிரி நாடுகளாக இருந்த மேற்படி இரு நாடுகளின் பிரதிநிதிகளும் தற்போது வியன்னா நகரில் பேச்சு நடத்தி வருகின்றனர். இந்தப் பேச்சுக்களின் முடிவில் ஈரான் மீதான பொருளாதாரத் தடையை நீக்க அமெரிக்கா முன்வர வாய்ப்புக்கள் உள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (ம)

## சீனாவுக்கு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை தாக்கினால் நிச்சயம் பதிலடி கொடுப்போம்!

### தாய்வான் எச்சரிக்கை

தைபே, ஏப். 10



அமைதியாகவோ அல்லது இராணுவ நடவடிக்கைகளாலோ தாய்வான் சீனாவுடன் இணைக்கப்படும் என்று சீனா தெரிவித்திருந்த நிலையில், அவ்வாறான முயற்சிகள் இடம்பெற்றால் தக்க தாக்குதல் நடத்தப்படும். இறுதிநாள் வரையில் பதிலடி கொடுக்கப்படும் என்று தாய்வான் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தாய்வனின் வெளிவிவகார அமைச்சர் வூ தெரிவித்ததாவது: நாங்கள், எங்களைத் தற்காத்துத் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை. நாங்கள் போரில் ஈடுபடும் சூழ்நிலை ஏற்பட்டால் போரில் ஈடுபடுவோம். தேவைப்பட்டால் எங்களை தற்காத்து கொள்ள கடைசி நாள் வரை போராடுவோம் என்றார். (ம)

**சாரதி தேவை**
நற்குணமுள்ள AD சாரதி அனுமதிப்பத்திரமுள்ள (வட மாகாணத்திற்குள் அனுபவமுள்ள) விற்பனை வாகனத்திற்கு யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
076 615 0138

**Vacancy**
Accountant, Asst. Accountant, Office Assistant, Driver(Heavy Vehicle), Cash Collection, Cashier, Graphics Designer, IT Technician, Labor, Delivery Boy
076 300 5506 021 315 2500

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் ஊரெழு பொக்கணை வீதியில் முருகன் கோவில் முன்பாக 5 பரப்புக் காணி விற்பனைக்கு.
1½ பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 505 8561
யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டில் செம்மணிவீதியில் கேணியடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
1½ பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 623 4204

**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்
A/L 2023
தொழினுட்பப்பிரிவு ஆரம்பம்
11.04.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00
077 017 5346
➡ பொறியியல் தொழினுட்பம்
➡ தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
➡ உயிர் முறைமைகள் தொழினுட்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.